பர்மா-மலாய் 0-1-3 இலங்கை-6 சதம்

TAMIL MANI REGD NO. M. 3384

தமிழ் மணி

எல்லாரு மோர்குலம் எல்லாருமோரினம்
எல்லாரு மிந்திய மக்கள்

(வாரப் பதிப்பு)

எல்லோரு மோர்நிறை எல்லோரு மோர்விலை
எல்லோரும் இந்நாட்டு மன்னர்—பாரதி

மணி 4 ஓசை 10 | சென்னை—வெகுதானிய ௵ தைமீ 2உ ஞாயிற்றுக்கிழமை (15—1—39) | விலை அரையணா

- புதிய மந்திரி -

சென்னைக் காங்கிரஸ் சர்க்காரின் மந்திரிகளில் ஒருவரான ராமன் மேனன் காலஞ் சென்றதால், அவர் பதவிக்குக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர். சுப்பராயன் மாற்றப்பட்டிருக்கிறார். கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசியாயிருந்த ஜே. சி. வர்க்கி கல்வி மந்திரியாக நியமனம் பெற்றிருக்கிறார். ஜே. சி. வர்க்கி ஒரு மலையாளி; கத்தோலிக்கக் கிறிஸ்துவர்; கல்வி சம்பந்தப்பட்ட வரையில் அவருக்கு நிறைந்த அனுபவம் உண்டு. அரசியல் சரித்திரத்தில் நிபுணர். ஆகவே, கல்வி மந்திரி பதவிக்கு அவர் முற்றிலும் பொருத்தமானவரே யாவர். சென்னை மந்திரி சபையில் கிறிஸ்துவருக்கு ஒரு ஸ்தானமில்லாதது பெரும் குறைவாக விருந்தது. அக் குறை நிவர்த்திக்கப்பட்டது. காலஞ்சென்ற மேனன் மலையாளி; ஆகவே, மலையாள வாசிகளுக்கும் மந்திரி சபையில் ஒரு ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜே சி வர்க்கியின் நியமனத்தால் முதன் மந்திரி ஆச்சாரியார், இரு பெரும் சமூகங்களின் கோரிக்கையை நிவர்த்தி செய்துவிட்டார்

அழகிய கூந்தல் அதிகமாக வளரச்செய்வது

குல்பஹாரா கூந்தல் தைலம்

உங்கள் ரோமத்தை எப்பொழுதும் வளம் பொருந்தியதாக வைத்துக்கொள்ளவும்
உங்கள் புத்தியைக் கூர்மையாக வைத்துக் கொள்ளவும்,
உங்கள் கண்களைக் குளிர்ச்சி, பொருந்திய தாக வைத்துக்கொள்ளவும்

குல்பஹார் கூந்தல் தைலத்தையே உபயோகியுங்கள்.

கணக்கற்றவர்கள் அந்தத் தைலத்தை உபயோகித்து பயனடைந்திருக்கிறார்கள்

ஒரு புட்டி விலை அணு 14. தபால் செலவு வேறு.
3 புட்டி ரூ. 2-8-0. பிரிட்டிஷ் இந்தியாவுக்குள் தபால் செலவு இனம்.
மொத்த வியாபாரிகளுக்குப் பிரத்தியேகமான விலையில் கொடுக்கப்படும்.
ஒவ்வொரு நகரிலும் ஏஜண்டுகள் தேவை.
முக்கால் அணு ஸ்டாம்பு அனுப்பினால் சாம்பில் இனமாக அனுப்பப்படும்.

தாஜ்முல் ஹூசேயின்,
வாசனை திரவியங்கள் உற்பத்தி செய்வோர், மௌண்ட் ரோட், மதராஸ்.

மதராஸ் டி. சி. என்
கோல்டன் மெடல் ஜ்வெல்லரி மார்ட்

பலவித அழகிய வளையல்கள்

அசல் தங்க வளையல்களை விட பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்ததல்ல.
கறுக்காது.
2வருஷ உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்

பெரிய சைஸ் 2 அகலமும் அதற்கு மேற்பட்டதும் ஜதை	ரூ. 3 0 0
மத்திய சைஸ் 1¾" முதல் 2"க்குள் ஜதை	ரூ. 2 8 0
குழந்தை சைஸ் 1¾-க்கு உட்பட்டது ஜதை	ரூ. 2 0 0
வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை	அணு 8

அணிந்திருக்கும் வளையலின் சுற்றளவை இஃபெல் ஒரு காகிதத்தில் குறித்து அனுப்பவும்

டி. சி. நாகலிங்கப்பா அண்டு கோ,
280, வால்டாக்ஸ் ரோடு, பார்க் டவுன் மதறாஸ்.

குறிப்பு:-"தமிழ் மணி" பெயரைக்குறிப்பிட்டு எழுதுகிறவர்களுக்கு மாத்திரம் விலையில் ரூபாய்க்கு ஒரு அணு வீதம் கமிஷன் கொடுக்கப்படும்.
2 அணு பெறுமானமுள்ளதும், பல அழகிய படங்களுள்ளதுமான எமது கேட்லாக் இனம்.
குறிப்பு:—சிலோன், பர்மாவுக்கு வி. பி. சார்ஜு அணு 12. மலேய நாட்டுக்கு ரூ. 2. மேற்கண்ட வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூரா கிரயமும் தபால் செலவும் ஆர்டருடன் அனுப்பவேண்டும்.

பலவீனத்தைப் பறக்கடித்து,

உடல் நலத்தையும் தாது விருத்தியையும் தருவது

சி. எம். சாமி

மன்மத குளிகை என்பதை அறியுங்கள்

இது தூர்ச்செய்கைகளின் பலனால் ஏற்பட்ட பலவீனம், போகசக்திக் குறைவு, இவைகளை நிவர்த்தித்து, தளர்ந்த நரம்பை முறுக்கேற்றி மன உற்சாகம், வீரிய விருத்தி முதலியவைகளைக் கொடுக்கும். 20 குளிகை விலை ரூ. 2-0-0.

கிடைக்குமிடம்:—

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.
2 ஷை பிராஞ்சு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.
3 இம்பீரியல் பின்மென் அண்டு ஸ்டோர்ஸ்,
107, தாம்ஸன் தெரு, ரங்கூன். (கிழக்கு)

டிரேட்மார்க்குகள் பெயர்கள் லேபில்களை
கல்கத்தா ரிஜிஸ்டர்
AGENTS ஜி.எ.ஓர்க்ஸ்
செய்ய 6. பந்தர் தெருவு மதராஸ்

தேவை
ஏஜண்டுகள் தேவை :-:

சர்ச்லைட் கட்டிங் டைமன்ஸ்

இயற்கை வைர சிறப்பு இதுவே என போற்றப்பெற்றது. உலகத்தில் அநேகம் பெயர் பெற்ற வைரங்கள் இருக்கின்றன. ஆனாலும், எமது வைரங்கள் உயர்வை எதவும் அடைந்ததில்லை ஏனெனில் உழைப்பு, உறுதி, கடினம், பூரிப்பு எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றது. சீமைக் கமலச் சிறப்பை சிக்கன முறையில் அடைந்து, திருப்தி அடையும்படி ரசாயன சாஸ்திர ஆராய்ச்சி நிபுணரால் கண்டு பிடிக்கப்பட்ட

சர்ச்லைட் வைரங்கள்

தோடு சைஸ் கமலம் 1-க்கு	0—8—0	குறைந்த கிரயத்திற்கு விற்று வருகின்றோம்.
கடுக்கன் சைஸ் கமலம் 1-க்கு	0—7—0	
பேஸர் சைஸ் கமலம் 1-க்கு	0—6—0	

குறிப்பு:-சர்ச்லைட் வைரங்கள் எங்களிடமும் எங்கள் உரிமை பெற்ற ஏஜண்டுகளிடமும்தான் கிடைக்கும்.
வெளியூர் ஆடர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும்.
ஒரு முறை ஆடர் செய்து உண்மையுணரக் கோருகின்றோம்.

எங்கள் ஏஜண்டுகள்:— 1 A. துரைசாமி நாய்க்கர், பெரிய காஞ்சிபுரம். 2 T. P. N. ராஜன் & கோ, மதுரை, 3 G. நாராயணசாமி நாயுடு, தஞ்சாவூர். 4 M. M. அப்துல் காதர். பருத்தித்துரை (சிலோன்)

விவரங்களுக்கு:— சம்சுதீன் அண்டு இஸ்மாயில், 94-96, மின்ட் ஸ்ட்ரீட், சௌக்கார்பேட்டை, மதராஸ்.

சொக்கநாதன்

தொடர் கதை

சத்திரத்தில் சதி!

தஞ்சைக்கு இரு சனியன்களாக வந்துதித்தவர்கள் அங்கப்பனும், ரஞ்சிதமும். ரஞ்சிதம் அங்கப்பனைத்தேடிச்சென்றாள். பிறர் அறியாவண்ணம்குறத்தி வேஷம் போட்டுக்கொண்டாள் அங்கப்பனிடம், மதுரை தூதவர்கள் தஞ்சை நகருக்கு வந்திருக்கும் ரகசியத்தைக் கூறினாள். தஞ்சைத் தூதுவர்களைக் கூண்டோடு பிடிக்க இருவரும் சதி செய்தனர். அதன்பின், ரஞ்சிதம் குறத்தி வேஷத்தில் அங்கிருந்து போகப் புறப்பட்டாள். அந்நேரத்தில் அவளுக்கு எதிரே ஒரு குஷ்டரோகி வந்தான். நொண்டி, நொண்டி நடந்துசென்று, அடுத்த வீட்டுத் திண்ணையில்போய்ச் சோர்ந்து உட்கார்ந்தான். குஷ்டரோகியைக்கண்ட ரஞ்சிதம் முதலில் சந்தேகித்தாள். ஆனால், குஷ்டரோகி நடந்து கொண்டவிதத்தைக் கண்டு சந்தேகம் தெளிந்தாள். குஷ்டரோகியோ, மாயக் குறத்தி ரஞ்சிதத்தைச் சந்தேகித்து, அவள்மீதே கண் வைத்துக்கொண்டிருந்தான். ரஞ்சிதம் அங்கப்பன் வீட்டிலிருந்து புறப்பட்டதும், குஷ்டரோகியும் அங்கிருந்து மெதுவாக எழுந்தான். தள்ளாடிக்கொண்டே தஞ்சை அரண்மனையை நோக்கி நடந்தான். அவனும் சில சந்துபொந்துகளில் நுழைந்து மாயமாக மறைந்தான்.

இந்நேரத்தில் தஞ்சை அரண்மனையில் கமலமும், மோகனுவும் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பாட்டி வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். ஆனால், பாட்டி வரக்காலதாமதமாகிவிட்டது. கமலத்துக்கு அதை சகிக்க முடியவில்லை அவள் அடிக்கடி அறையின் வாசலைக் கவனிப்பதும், ஜன்னல் வழியாக வெளியே பார்ப்பதுமாக இருந்தாள். பாட்டியைக் காணவில்லை. ஆனால், கமலம் எதிர்பாராத ஒருவள் சாவதானமாக நடந்து வருவதைக் கண்டாள். அவள் யார்? ரஞ்சிதம்; ரஞ்சிதத்தைக் கமலம் அரண்மனையில் காணவில்லை அவள் எங்கு, என்ன வேலையாய்ச் சென்றிருந்தாளென்பதும் தெரியவில்லை. வெளியில் சென்றிருந்தால் அவள் எங்கே போயிருப்பாள்? கமலத்துக்கு அப்பொழுதுதான் உண்மை புலனாயிற்று. சட்டென ரஞ்சிதத்தின் பார்வையிலிருந்தும் மறைந்தாள். ரங்கனை அவசியம், அதிலும், அதிசீக்கிரத்தில் காணவேண்டுமென விரும்பினாள். ஆத்திரத்தை அடக்க முடியாமல் மோகனா அறையிலேயே அங்குமிங்கும் உலாவிக்கொண்டிருந்தாள். கமலத்தின் பரபரப்பை மோகனா கவனித்தாள். அவளுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

"கமலா...என்ன, அங்குமிங்கும் உலாவிக்கொண்டேயிருக்கிறாயே? நான் பேசினாலும் சரியான பதில் கொடுக்கிறாயில்லை..."

"மன்னித்துக்கொள்ளுங்கள்..... என் எண்ணம் ஒரு நிலையிலில்லை"

"ஓகோ! ரங்கனைக் காணத்துடிக்கிறாய் போலும்!" என மோகனா கேலிசெய்தாள்.

"ஏன்?...உங்களுக்குக் கேலியாக இருக்கிறதா?"

"ஏன் கமலம்?...நான் கேலி செய்தாலென்ன? என் தங்கை தானே நீ...என் தங்கை காதலன் ரங்கன்!...நான் ஏன்..."

"மனம்போல் செய்யுங்கள்... காதல் அல்ல; என் கடமைதான் இப்போ பெரிது...அக்காள்தான் அத்தான்..." என கமலா மெதுவாக ஒரு போடு போட்டாள்.

"கமலா, திருப்பிக் கொண்டாயா!...சரி; இருவருமே அந்த நிலைமைதான்..." என மோகனா புன்னகை தவழக் கூறினாள். இருவரும் அவர்கள் கவலையை சிறிது நேரம் மறந்து சிரித்தார்கள்.

இந்நேரத்தில் பாட்டி மெதுவாக அறையினுள் நுழைந்தாள். அவளைக் கண்டதும் கமலம், "வா பாட்டி உன்னைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்..."

"அப்பொழுதே வந்திருப்பேன். ஆனால், ரங்கன இப்போதான் வீட்டுக்குத் திரும்பினான்...உடனே உன்னை வரும்படி சொல்லச் சொன்னான்..."

"அது எனக்குத் தெரியும்... நானும் அவரை அவசரமாகப் பார்க்கவேண்டும்...பாட்டி, மோகனாவைக் கவனித்துக் கொள்...அத்துடன், அந்த விஷமம் ரஞ்சிதத்தின் மீதும் ஒரு கண் வைத்துக் கொள்" என்று கூறிவிட்டு கமலம் சட்டென மோகனா அறையிலிருந்து வெளியேறினாள். நேரடியாக அவள் அறைக்குச் சென்றாள்.

கமலத்தின் அறையிலுள்ள அந்தரங்க அறையின் வழியாக, சில நிமிஷ நேரத்தில் அரண்மனைத் தோட்டத்திலுள்ள ரகசிய சுரங்க வழியே வெளியில் ஒரு கிழவி ரூபமாக வந்தாள். தள்ளாடித் தள்ளாடிச் செடிகளினூடே மறைந்து சென்றாள். பழைய மண்டபம் வந்து சேர்ந்ததும் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே படிகளில் அவசரமாக ஏறினாள். அந்தரங்க அறைக்கு வந்ததும் சட்டெனக் கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றாள். அங்கு ரங்கன் இவளுக்காகத் தயாராகக் காத்துக் கொண்டிருந்தான்.

"கமலம், நான் நெடு நேரம் உன்னோடு பேசிக்கொண்டிருக்க முடியாது. அவசரமாகப் பல விஷயங்களைக் கவனிக்க வேண்டியிருக்கிறது..."

"ஆம்; நான் அறிவேன்...உங்களைக் காணும்வரையில் என் மனம் ஒரு நிலையிலில்லை."

"ஏன்? அப்படி நீ கலங்கவேண்டிய காரியம்..."

"அவள் சண்டாளி ரஞ்சிதத்தை அரண்மனையில் காணவில்லை என்ன சதியில் இறங்கி இருக்கிறாளோ?"

"உண்மைதான்! ரஞ்சிதம் கொடியவள்! புதிய சதியொன்றில் இறங்கியிருக்கிறாள். அவளைக் கண்டேன்."

"ரஞ்சிதத்தையா? எங்கே? எப்படி?"

"அவள் குறத்தி வேஷம் போட்டுக்கொண்டு அங்கப்பன் வீடு சென்றாள். நான் குஷ்டரோகி வேஷம் போட்டுக் கொண்டு அவளைப் பின் பற்றிச் சென்றேன்..."

"எப்போ? எதற்கு?"

"இன்று காலையில்...அவள் அங்கப்பனுடன் செய்த சதிகளை பதுங்கியிருந்து கேட்டேன்."

"என்ன சதி செய்தாள்?"

"மதுரையிலிருந்து தஞ்சைக்குத் தூதுவர்கள் வந்திருப்பதை ரஞ்சிதம் எப்படியோ அறிந்திருக்கிறாள்."

"நாங்கள் பேசிக்கொண்டதைப் பதுங்கியிருந்து கேட்டிருப்பாள். அவள் திருடியாயிற்றே!"

"உண்மைதான்; அதை அவளே அங்கப்பனிடம் கூறினாள். நீங்களும் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்; பகலில் பக்கம் பார்த்து பேசு; இரவில் அதுவும் பேசாதே என்பார்கள்."

"உண்மைதான் ....சண்டாளி!... மதுரை தூதவர் உயிருக்கு உலை வைக்க சதி செய்தாளா?"

"ஆம்; அவர்களை அப்படியே கூண்டோடு பிடிக்க அங்கப்பன் உறுதி கொண்டிருக்கிறான்...அதற்காகத் தஞ்சையிலுள்ள சகல சிறந்த ஒற்றர்களையும் ஏற்பாடு செய்து வருகிறான்..."

"மதுரை தூதுவர்கள் தங்கியிருக்கும் இடத்தை அவன் அறிவானோ?"

"ஆம்; அதையும் ரஞ்சிதம் அறிந்திருக்கிறாள்..."

"ஐயோ! இதென்ன ஆச்சரியமாக இருக்கிறது; இது பெரிய ஆபத்தாகவந்து முடியுமே!"

(அடுத்தப் பக்கம் பார்க்க)

அழகான காலண்டர்கள்.

அழகும், நல்ல அமைப்பும் பொருந்திய

கத்தோலிக்க காலண்டர்கள்

13 பக்கங்கள் அழகான பல வர்ணப் படங்கள் நிறைந்தவை.

கத்தோலிக்கக் கிறிஸ்துவர்களுக்கு அவசியமான விஷயங்களும், வருடம் முழுவதும் வரக்கூடிய திருநாட்கள் குறிப்பிட்டுள்ளதுமான காலண்டர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்துக்கும், கிறிஸ்தவக் கல்லூரிகளுக்கும் அழகு செய்யக்கூடியவை; ஏன்? ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்துக்கும் அத்தியாவசியமானவை என்று சொல்லலாம்.

வருடம் முழுவதுக்கும் உபயோகப்படக்கூடிய ஒரு சிறந்த சன்மானம்

காலண்டர் 1-க்கு விலை ரூ. 1.

ஒரு டஜன் காலண்டர் விலை 10-8.

குறிப்பு:—எமது கடையையும், காரியாலயத்தையும் லோன்ஸ்கோயருக்கு எதிரிலுள்ள 165ம் நம்பர் கட்டிடத்துக்கு மாற்றியிருக்கிறோம்.

தாமஸ் ரொட்ரிகோ அண்டு சன்ஸ்,

165, பிராட்வே, மதராஸ்.

போலி மார்க்கு சுருட்டுகளைக் கண்டு உஷார்! எங்கும் கீர்த்தியுடன் விளங்குவது

V. ARUMUGA CHETTY

விநாயகர் மார்க்கு சுருட்டுகள்

வ. ஆறுமுக செட்டியார், நெ. 18, அண்ணாபிள்ளை தெரு, ஜி. டி. மதராஸ்.

சத்திரத்தில் சதி!

(முன் பக்கத் தொடர்ச்சி)

"ஆபத்து ஒன்றுமில்லை; நீ பயப்பட வேண்டாம். இந்த அங்கப்பனுக்கு நான் இளைத்தவனு?"

"எங்களால் இந்தக் கஷ்டம்! நாங்கள் இந்த விஷயத்தைப்பற்றிப் பேசாமலேயே இருந்திருந்தால் ரஞ்சிதம் அறிந்திருப்பாளா?"

"கமலம், உனக்குத் தன்னம்பிக்கை இல்லை. எல்லாம் நன்மைக்கே என்பதை மறந்து பேசுகிறாய்! நீங்கள் பேசியதை ரஞ்சிதம் கேட்டதும், அதை அங்கப்பனிடஞ் சொல்லி அவன் மதுரை தூதுவர்களை அப்படியே பிடிக்க யோசனை போடுவதும் எவ்வளவு பெரிய நன்மைக்குத் தெரியுமா?"

"அப்படியா? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?"

"உனக்கு புரியாதுதான்! எல்லாவற்றையும் பொறுத்துப் பார். ரங்கனிடம் உனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லைபோலும்!

"உங்கள் விஷயத்தில் நம்பிக்கை இல்லாமலில்லை நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும். ஆனால், இந்த சதிகாரர்கள் அனைவரையும் நீங்கள் தனியே எப்படி தோற்கடிப்பீர்களென்றே கவலைப்படுகிறேன்.

"என்னால் முடியும்... அதற்கு மேல் நான் ஒன்றும் கூறத் தயாரயில்லை"

'உங்கள் யோசனை என்ன? என் உதவி...'

"இப்பொழுது என்னால் ஒன்றும் கூற முடியாது...உன் உதவி இப்போது தேவைப்படாது... ஆனால், நாளைக்குத் தேவைப்படலாம்..."

"நாளைக்கா?...எந்த நிமிஷத்திலும் தயார்!...எப்பேர்ப்பட்ட உதவி?..."

"ஆம், நாளைக்கு அநேகமாக மதுரை தூதுவர்கள் தஞ்சை அரசரிடம் வரலாம்...வந்தால் அங்கப்பன்...ஒருவேளை ஏதேனும் விஷமம் செய்யலாம்..."

"எங்கே? எந்த இடத்தில்?"

"அரண்மனைக்குள்...நீ தஞ்சை தூதுவர்களுக்குத் துணை செய்ய வேண்டும். விசேஷமாக மதுரை தளகர்த்தர் வீரசிங்கன் உயிருக்கு ஆபத்து வராமல் காப்பாற்ற வேண்டும்..."

"வீரசிங்கனை எனக்குத் தெரியாதே?"

"இதோ பார் அவனுடைய படம்; இந்த முகச் சாயலிலிருந்து நீ தெரிந்துகொள்ளலாம். அதற்காகவே இச்சப் படத்தை உன்னிடம் கொணர்ந்தேன்..."

"ஆம்; தெரிந்துகொண்டேன் என்ன வீர லக்ஷணம்! தள்ளாத வயதிலும் வீர ஜோதி வீசுகிறது!... அவர் முகத்தை இந்த ஜென்மத்தில் மறக்க முடியாது..."

"அவர் ஒரு வீராதி வீரன்; சந்தேகமில்லை..."

"அது போகட்டும்; அப்புறம் நான் என்ன செய்யவேண்டும்?"

"அவ்வளவுதான்; நாளைக்கு நீ முன்னெச்சரிக்கையுடனிருந்து காரியத்தை சமாளித்துக்கொள்ள வேண்டும். எப்படி சமாளிப்பாயோ அதை உன் யோசனைக்கே விட்டு விடுகிறேன்..."

"மீண்டும் எப்பொழுது சந்திப்பது?"

"நாளை இரவு...கட்டாயம் நான் காணவேண்டும்."

"கண்டிப்பாக வருகிறேன்... இதற்கிடையில் உங்களைக் காண வேண்டிய அவசியம் ஏற்பட்டால்..."

"அவசியம் ஏற்படாது; அப்படியே ஏற்பட்டாலும் பாட்டியிடஞ் சொல்லியனுப்பு..."

"அவ்வளவுதானா?"

"ஆம் மோகன சுகமே இருக்கிறாளா?"

"சுகமே இருக்கிறாள்..."

"சரி போய்வா...நான் அவசரமாகப் போகவேண்டும்; அதிக வேலைகளிருக்கின்றன..."

"நீங்கள் என்ன செய்யப்போகிறீர்களென்பதைப்பற்றி ஒரு வார்த்தை கூடக் கூறவில்லையே?'

"ஆம்; ஏற்கனவே கூறியபடி என்னால் ஒன்றும் இப்போது கூற முடியாது. நீ போய்வா...அப்புறம் பேசிக்கொள்ளலாம்..." எனக் கூறி, கமலாவுக்கு விடை கொடுத்து அனுப்பினன்.

கமலா அதே கிழவி வேஷத்துடன் அரண்மனைத் தோட்டத்துக்கு வந்தாள். ரகசியவழியாக அவள் அறைக்குச் சென்ருள்.

ரங்கன் அந்தரங்க அறையிலிருந்து அவன் வீட்டுக்குத் திரும்பினன். சிறிது நேரம் ஆழ்ந்த சிந்தனையிலாழ்ந்திருந்தான். அவசரமாக ஒரு சிறு மூட்டையை எடுத்துக்கொண்டு வெளியில் புறப்பட்டான்.

ரங்கன் புறப்பட்டுச் சென்ற ஒருமணி நேரத்துக்குப்பின் தஞ்சைக்குத் தெற்கேயுள்ள சத்திரத்தை நோக்கி ஒரு நொண்டிப் பிச்சைக்காரன் திருவோடு ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டு மெதுவாக நடந்தான். சத்திரத்தின் வாசலுக் கருகில் வந்து உட்கார்ந்து, ஒரு தூணோடு சாய்ந்து கொண்டிருந்தான். அவன் முகத்தை நோக்கும் எவர் மனமும் இரங்கும். பல தினங்களாக அன்ன ஆகாரமின்றி வருந்தியவன் போல் காணப்பட்டான். பசிக் களையால் உட்கார்ந்திருக்கவும் முடியாமல் தரையில் படுத்துக்கொண்டே அங்கு வருகிறவர்கள், போகிறவர்களைக் கவனித்துப் பார்த்தான். எவரேனும் அவனுக்கு இரங்கி ஏதேனும் கொடுக்க மாட்டார்களா வென்ற ஆவல் அவன் முகத்தில் தென்பட்டது. இந்நேரத்தில் சத்திரத்திலிருந்த சில நாட்டுப்புறத்தார் வெளியில் சென்ருர்கள். அவர்களில ஒருவர் வயோதிகர். அவரைக் குறிப்பாக கவனித்த பிச்சைக்காரன் நொண்டிக் கொண்டே அவர் பின்னால் சென்ருன் "ஐயா பிரபு! ஏதேனுங்கொடுங்கள்; பசி கண்ணைப் பிடுங்குது!" என்ருன். வயோதிக நாட்டுப்புறத்தான் சட்டெனத் திரும்பினர். பிச்சைக்காரனைக் கண்டு, அவன் திருவோட்டில் எதையோ போட்டார். பிச்சைக்காரன் அவர் நீட்டிய கையைப் பிடித்தான். அடுத்த விநாடியில் ஆனந்தங் கொண்டவன் போல் சத்திரத்துக்கு எதிரேயுள்ள ஒரு சிறு சாவடிக்குள் நுழைந்தான்.

பிச்சைக்காரன், வயோதிக நாட்டுப்புறத்தான் கையைச் சட்டெனப் பிடித்ததைக் கண்டு வயோதிகர் சந்தேகித்தார். மறு விநாடியில் அவர் பயம் தெளிந்தது; முகம் மலர்ந்தது பிச்சைக்காரன் கொடுத்த சிறு துண்டுக் கடிதாசியைப் பிரித்துப் படித்தார். திரும்பிப் பார்க்காமல் நடந்தார். அவருடன் சென்ற இதர நாட்டுப்புற வாசிகளும், ஏதோ நகரத்தைக் கண்டறியாதவர்கள்போல் தஞ்சையின் பல திசைகளில் பிரிந்து சென்றனர். ஆங்காங்கு நடக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக் கொண்டே போனார்கள்.

மாயக்குறத்தி ரஞ்சிதம், அங்கப்பன் வீட்டிலிருந்து வெளியேறியதும், அவன் ஆத்திரமடைந்து அறைக்குள்ளேயே சிறிது நேரம் உலாவிக்கொண்டிருந்தான். பெரிய யோசனை போட்டான். சகல மதுரை ஒற்றர்களையும் எப்படிக் கூண்டோடு பிடிப்பதென்பதைப்பற்றி ஆலோசித்தான். உடனே தஞ்சையிலுள்ள பேர்பெற்ற ஒற்றர்களையெல்லாம் அழைத்தான். அவர்கள் அன்றிரவுக்குள் எப்படியாவது மதுரை ஒற்றர்கள் அனைவரையும் கைது செய்துவிட வேண்டுமெனக் கண்டிப்பான உத்திரவு போட்டான் மதுரை ஒற்றர்கள் தெற்கேயுள்ள சத்திரத்தில் தங்கியிருப்பதாகவும், அந்த விஷயம் தஞ்சை அரசர் முதல் யாரும் அறியக்கூடாதென்றும் அறிவித்தான். அவ்வளவு ரகசியமாக அவர்களைப் பிடித்து சிறையில் அடைத்துவிட வேண்டுமென்பது அங்கப்பன் நோக்கம். தஞ்சை ஒற்றர்களும் அது பெரிய காரியமாவென்று மீசையை முறுக்கிக்கொண்டு புறப்பட்டார்கள் மாறுவேடந்தாங்கித் தஞ்சையின் நாலாபுறமும் சென்ருர்கள். பருந்துகளைப்போல் வீதிகளில் செல்லுபவர்களைக் கூர்ந்து கவனித்தார்கள். சந்தேகப் பேர்வழிகளைப் பின்பற்றிச் சென்றனர் தெற்கேயுள்ள சத்திரத்தை அவர்கள் மறந்துவிடவில்லை கருடன் போல் அதையும் வட்ட மிட்டுக் கொண்டிருந்தனர்.

சாவடிக்குச் சென்று வயிறார உண்ட பிச்சைக்காரன் மீண்டும் சத்திரத்தில் வந்து படுத்துக் கொண்டான் அந்த நொண்டிப் பிச்சைக்காரனைக்கூட தஞ்சை ஒற்றர்கள் விட்டு விடவில்லை. ஒருவர் அவனை மிரட்டினர். ஊர், பேர் முதலிய விவரங்களைக் கேட்டார் பாவம்! பிச்சைக்காரன் இதேது வம்பு! சனியனில் மாட்டிக்கொண்டோமென முணுமுணுத்துக்கொண்டே நடந்தான் தஞ்சைக்கு மேற்கேயுள்ள ஒரு காட்டுப் பிரதேசத்தை நோக்கி நடந்தான். குறிப்பிட்ட ஓரிடம் வந்ததும் சுற்றுமுற்றும் பார்த்தான் இந்நேரத்தில் ஓரிச் சென்று சிட்டி அடிக்கும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டு அத்திக்கை நோக்கினன்!

(தொடரும்)

75 வருஷங்களாக இந்த A மார்க்

பெருங்காயம்

ஒன்றே மிகவும் உயர்ந்தது என எங்கும் புகழுடன் லட்சக்கணக்கான இந்திய குடும்பங்கள் தினம் உபயோகிப்பது. போலி மட்டக் காயங்கள் பஜாரில் மலிந்து கிடப்பதை வாங்கி ஏமாருமல் A மார்க் பெருங்காயம்தான் வேண்டும் என்று எப்பொழுதும் கண்டிப்பாய்க் கேளுங்கள்.

A மார்க்கை வாங்கினல் ஏமாற்ற முடியாது

1 பவுண்டு ½ பவுண்டு ¼ பவுண்டு. பாக்கிங்குகளிலும் 1 சேர் அழகான டின்களிலும் எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

வல்லபதாஸ் தேஜ்பால்

கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.

∴ அங்கும் இங்கும் ∴

மிதவாத — — "அவுட்!"

ஒவ்வொரு தேசத்திலும் பல கட்சிகள் உண்டு. முற்போக்கான கட்சிகளுண்டு; பிற்போக்கான குருட்டுக் கட்சிகளும் உண்டு ஆனால், இந்தியாவிலிருக்கும், மிதவாதக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, ஜஸ்டிஸ் கட்சியின் வாலாகிய சுபமரியாதைக் கட்சி முதலியவைகள் ஒரு தினுசு அந்த மாதிரிக் கட்சிகளை உலகில் எங்கும்

மகாத்மா காந்தி.

காண முடியாது மருந்துக்குக் கூடத் தேடிப் பிடிக்க முடியாது. சென்னையில் ஜஸ்டிஸ்கட்சி மகாநாட்டிலும் பம்பாயில் மிதவாதக் கட்சி மகா நாட்டிலும் அவர்கள் விட்ட வெறும் "அவுட்" வாணங்களே இதற்குப் போதிய சான்றாகும். அவர்கள் வீரம் பேசுவார்கள்; மார்தட்டிச் சண்டைக்குப் புறப்படுவதுபோல் மிரட்டுவார்கள் ஆனால், எல்லாம் பேச்சோடு சரி! "அவுட்" வாணம்போல் "புஸ்" என்று புகைந்துபோகும்! இவர்கள் உருட்டல் மிரட்டல்களெல்லாம் வெறும் "அவுட்" என்பது பிரிட்டிஷாருக்குக்கூடத் தெரியும். ஆகவே, அவர்கள் இந்த மிதவாதத் தோழர்கள் வீராப்புப்பேச்சுகளை யெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிடுவார்கள். இவர்கள் கையாலாகாத பேர் வழிகளென்பதையும் அறிவார்கள் இவர்கள் உருட்டலைக் கண்டோ பிரிட்டிஷ் சிங்கம் பயந்துவிடும்?

பேர்பெற்ற தத்துவ சாஸ்திரி சர். ராதா கிருஷ்ணன்.

சரணாகதி!

ஏதோ பிரமாண்டமான சக்தியைத் திரட்டிப் பிரிட்டிஷ் ஆட்சியை நொடிப் பொழுதில் கவிழ்த்துவிடப் போவதாக வீரம் பேசுகிறார்கள். இந்த வீரப் பேச்சு, மிதவாத ஜஸ்டிஸ் கட்சியாரின் ஒருவிதமான ஆயுதம்! போலீஸாருக்கு "லத்தி" ஆயுதமாக இல்லையா? சோல்ஜர்களுக்குத் துப்பாக்கியும், சட்டியும் ஆயுதங்கள். கொள்ளைக் கூட்டத்தாருக்கு ரிவால்வர்தான் ஆயுதம் மகாத்மா காந்திக்கும், அவர் சிஷ்ய கோஷ்டிகளுக்கும் சத்தியாக்கிரகம் ஒரு பெரிய ஆயுதம் அதேபோல் மிதவாதிகளுக்கு வாய் வீச்சு தான் ஆயுதம்! இந்த வாய் வீச்சவது நீடித்திருக்குமா? அதுவுமில்லை; அது பிரிட்டிஷாரைக் கெஞ்சும் சரணாகதியில் வந்துமுடியும் வெறும் பிரார்த்தனை என்று சொல்லலாம்! பிரார்த்தனையால் எத்தனையோ காரியங்களைச் சாதிக்கமுடியுமென்று கூறுகிறார்கள். பக்தர்கள் பிரார்த்தனையிலேயே உறுதிகொண்டிருக்கிறார்கள். எவரும் அசைக்க முடியாத கடவுளைக்கூடப் பிரார்த்தனையைக் கொண்டு அசைத்துவிடலாம்; சுவர்க்கலோகத்தின் கதவுகளைக்கூடப் பிரார்த்தனையால் உடைத்துத் தகர்த்துச் சுவர்க்கத்திலிருக்கும் கடவுளிடம் பிரார்த்தனை போய்ச் சேரும்படி செய்துவிடலாம்! பிரார்த்தனையின் வல்லமை, சக்தி அது. இவ்வாறிருக்க, மிதவாதத் தோழர்களின் பிரார்த்



முஸ்லிம் லீக் தலைவர் ஜின்னா. இவரும் கமாலைப் பாராட்டுகிறார். ஆனால், கமாலின் முற்போக்குக் கொள்கை இவரிடம் பூஜ்யம்

அவாளுக்கு — — இவாள்!!

தனையால் என்னதான் சாதிக்க முடியாது? பிரிட்டிஷாரின் வெஸ்ட்மினிஸ்டர், சுவர்க்லோகத்தின் கதவுகளைக்கூட, மிதவாதத்தோழர்களின் பிரார்த்தனையால் தவிடு பொடியாக்கி விடலாமென மிதவாத வீரர்கள் எண்ணியிருக்கிறார்கள் அவர்கள் பலம் பொருந்திய பிரார்த்தனைக்குப் பிரிட்டிஷ் தெய்வங்கள் செவி சாய்க்காமலிருக்க முடியாதென்ற நம்பிக்கை மிதவாதிகளுக்கு அதிகமாக உண்டு. அந்த நம்பிக்கை அவர்கள் இரத்தத்தில் ஊறிப் போயிருக்கிறது. அதனால்தான் அவர்கள் பிரார்த்தனையில் உறுதி கொண்டு, பிரிட்டிஷாருக்குச் சரணாகதியடைந்து வருகிறார்கள். ஆனால், காங்கிரஸ் நிலைமை அப்படியல்ல; அவர்களுக்கு இந்தப் பிரார்த்தனையில் நம்பிக்கை இல்லை; அந்தக்

காலஞ் சென்ற கமால்பாஷா.

காலம் மலையேறி விட்டது. அவர்கள் சத்தியாக்கிரக ஆயுதத்தைத் தயாராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தச சத்தியாக்கிரகத்துக்குத்தான் பிரிட்டிஷார் பயப்படுவார்கள். அதற்கு அஞ்சியே அவர்கள் வழிக்கு வருவார்கள்.

அடுத்த அண்ணாத்தைகள்!

இந்த மிதவாதத் தோழர்களுக்கு அடுத்த அண்ணாத்தைகள் ஹிந்து மகா சபையினரும், லீக் காரரும். இவர்கள் மிதவாதிகளுக்கு ஒருபடி மேல்தான் ஆனால், இந்த அண்ணாத்தைகளுக்குக் காங்கிரஸ் என்றலதான் பிடிக்காது; விளக்கெண்ணெய் சாப்பிட்டமாதிரி காங்கிரஸ், முஸ்லிம்கள் சபை; ஏனென்றால், முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் காங்கிரஸ் ஏராளமான சலுகைகள் கொடுக்கிறதென்று ஹிந்துமகா சபையினர் கூறுகிறார்கள். ஹிந்து மகாசபைத் தலைவர் சாவர்க்கர் இதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார் முஸ்லிம் லீக்காரரோ, காங்கிரஸ் ஹிந்துக்கள் சபை; ஏனெனில், காங்கிரசில்

(அடுத்த பக்கம் பார்க்க)

-: அங்கும் இங்கும் :-

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஏராளமாக ஹிந்துக்களிருக்கிறார்களென்று சொல்லுகிறார்கள். லீக் தலைவர் ஜின்னா இந்தக் கூரை மீதிருந்து கொக்கரிக்கிறார் இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சப்பட்டையல்ல; இரண்டு அண்ணத்தைதாளும், அவாளுக்கு இவாள் எழுந்திருந்து உண்பார்தான்.

கமால் வீரர்!

துருக்கி வீரர் கமால் பாஷாவைப் போற்றுதாரில்லை; விசேஷமாக இந்திய முஸ்லிம்கள் எல்லோரும் கமாலைப் புகழுகின்றனர். இந்த உயர்ந்த புகழுக்கு அவர் உரியவர்தான். ஆனால், இந்திய முஸ்லிம்கள் கமாலைப் பின்பற்றுகிறார்களா? அதுதான் இல்லை. கமால் மகா முற்போக்கானவர் இந்திய முஸ்லிம்களில் பெரும்பான்மைபேர் கமாலுக்கு நேர் விரோதம். கமால் பெரிய தேசிய வீரர்; சமுதாயம், கல்வி முதலிய விஷயங்களில் அவர் துருக்கியை அடியோடு புரட்டிவிட்டார். இந்திய முஸ்லிம்கள் உருதுவே வேண்டும். உருதுவுக்கு அரபிய எழுத்துக்களை வேண்டுமென்கிறார்கள். கமால் அரபிய எழுத்துக்களை அடியோடு எடுத்துவிட்டார். துருக்கியில் தொழுகைக்குக்கூட துருக்கிப் பாஷையையே உபயோகித்து வர ஏற்பாடு செய்தார் இந்தியாவில் தொழுகைக்கு இன்னமும் அரபிக் பாஷையைத்தான் உபயோகித்து வருகிறார்கள் முஸ்லிம் சகோதரர் இந்திய பாஷையை அதாவது, அவர்கள் தாய்ப்பாஷையை உபயோகிக்க விரும்புகிறார்களில்லை. இந்தியாவில் கிலாபத் கிளர்ச்சி ஏற்பட்டபோது, பெரும்பான்மையான முஸ்லிம்கள் அதை ஆதரித்தார்கள். அதே தீவிர கிளர்ச்சிக்காரர் காமாலைப் பாராட்டுகிறார்கள். ஆனால், கிலாபத்தை ஒழித்தவர் கமால்தான். பல பெண்களை மணந்துகொள்ளுவதைக் கமால் துருக்கியில் தடுத்துவிட்டார். முஸ்லிம் பெண்களுக்கு விவாகரத்து உரிமை கொடுத்துச் சட்டஞ் செய்தார் முக மூடி முறையையும் அகற்றினர். ஆனால், இந்திய முஸ்லிம்கள் முக மூடியை ஒழிக்கப் பிரயத்தனப்படவில்லை முக மூடி முறையை ஒழித்து விட்டால் இஸ்லாம் மதத்துக்கே ஆபத்து வந்துவிடுமென்று கூறுகிறார்கள். முகமூடியை தடுத்த துருக்கியில் இஸ்லாமின் புனித தருமம் கெட்டுவிடவில்லை. இதை அநேக முஸ்லிம் மக்களுமே ஒப்புக்கொள்ளுகிறார்கள். பல பெண்களை ஒருவர் மணந்துகொள்ளுவது கொடுமையானது. அந்த முறையை ஒழிக்க வேண்டுமெனச் சட்டங்கொண்டு வந்தால், முஸ்லிம்கள்தான் முதலில் எதிர்க்கின்றனர் முஸ்லிம்களை அந்தச் சட்டத்திலிருந்து நீக்கிவிட வேண்டுமென வாதாடுகிறார்கள் பெண்களுக்கு விவாகரத்து உரிமை இருக்கவேண்டுமென இந்திய சட்ட சபையில் ஒரு சட்டம் வந்தது ஞாபகமிருக்கலாம். அதை முஸ்லிம் அங்கத்தினர் எதிர்த்தனர். எதிர்த்ததோடு மட்டுமல்ல, முஸ்லிம் பெண்கள், அதாவது மணமான முஸ்லிம் பெண்கள் கணவரை விவாகரத்து செய்து, வேறு மதம் மாறியபோதிலும், அவர்கள் ஆதியில் மணந்துகொண்டவருக்கே அப்பெண்கள் சொந்தமாகுமென்று கூட ஒரு முஸ்லிம் அங்கத்தினர் இந்திய சட்ட சபையில் கூறினர். இவ்விதமாக, கமாலைப் பாராட்டும் முஸ்லிம் தலைவர்களுக்கு கமாலை பின்பற்ற வேண்டுமென்ற எண்ணம் கிடையாது. முஸ்லிம் தலைவர்களின் போக்குப் பொதுவாக இதுதான். மதப் பக்தி அவசியம்; மகா அவசியமென்பதை யாரும் மறுக்கவில்லை ஆனால், சமுதாய விஷயங்களில முற்போக்கான கொள்கை வேண்டும் காலத்தின் மாறுதல்களுக்கு ஏற்றாற்போல் கொள்கைகளையும் ஓரளவு திருத்திக் கொள்ளுவதே நல்லது.

மகாத்மா "ராஷ்புடின்"!

மகாத்மா காந்தி ஒரு அயோக்யர் மோசடிக்காரர், ரஷிய 'ராஷ்புடின்" என்று தூற்றும் துரும்புகள் பல உண்டு. அதிலும், தென்னாட்டில் இந்தத் தூற்றல் அதிகம்; ஆனால், பெரிய தத்துவ சாஸ்திரியான சர். ராதாகிருஷ்ணன் மகாத்மா காந்தியையும், அவருடைய சாத்விகக் கொள்கையையும் போற்றியிருக்கிறார். "எனது கீழ்தேச தத்துவ ஆராய்ச்சிக்கும், போதனைக்கும் காந்திஜி ஒரு உயிருள்ள அத்தாட்சி" என்கிறார். சத்தியத்துக்கும், அஹிம்சைத் தத்துவத்துக்கும் இன்று உறைவிடமாக இருப்பவர் காந்திஜியே. அதில் சந்தேகமில்லை.

செத்தால் என்ன?

மேலும் சர். ராதாகிருஷ்ணன் கூறுவதாவது:—

ஒரு உலக யுத்தம் வந்தால் இந்தியா என்னசெயய வேண்டுமென்று என்னைப் பலர் கேட்கிறார்கள் சரி யுத்தம் வரட்டும்; யுத்தத்தால் எத்தனையோ தேசங்கள், லக்ஷக்கணக்கான உயிர்கள் பாழாகின்றன. நாகரிகமே அழிந்து போகிறது. இதை நம்மில் பலர் கண்ணாரக் கண்டிருக்கிறோம். பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்ட எந்த நாகரிகமும் நீடித்திருக்காது. அது அழிந்தே தீரும் யுத்தம் வந்தால் இந்தியர் அஹிம்சா தர்ம வழியில் நிற்க வேண்டுமென்பதே எனது கருத்து. யுத்தத்தில், மிருக பலத்தைக் கொண்டு நடக்கும் யுத்தத்தில் பல லக்ஷக்கணக்கான மக்கள் மடியவில்லையா? அப்படியானால், அஹிம்சா தர்ம வழி நின்று நம்மில் பலர் மடிந்தால் என்ன கெட்டுப் போகிறது? ஒரு உயர்ந்த தத்துவத்துக்காக இந்தியர் பலர்மாண்டாரென்ற புகழ் நமக்குக் கிடைக்கும். அந்த உயர்ந்த தத்துவத்துக்காக உயிர் கொடுத்தவர்கள் ஒருபோதும் மடியமாட்டார்; மடிந்தாலும் அவர்கள் புகழ் உயிருடன் விளங்குமென்பதில் சந்தேகமில்லை. இந்தியா நமது தாய் நாடு; உலகில் ஒப்புயர் வற்று நிற்கும்!

சொக்கநாதன்

—: அல்லது :—

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல் கீழ்கண்ட ஊர்களிலுள்ள "தமிழ் மணி" ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

புஸ்தகம் 1-க்கு விலை அணா 12.

மதுரை	நாமக்கல்
திருச்சினாப்பள்ளி	தேவகோட்டை
கோயம்புத்தூர்	ஈரோடு
நாகப்பட்டணம்	கும்பகோணம்
நாட்டரசன் கோட்டை	பொள்ளாச்சி
பணகுடி	உதகமண்டலம்
நிலக்கோட்டை	மன்னார்குடி
பவானி	புதுக்கோட்டை
காஞ்சிவரம்	உடுமலைபேட்டை

மானேஜர்:—தமிழ் மணி.

களைப்பா?

இழந்த உங்கள் பலத்தை

இந்த மூன்று டானிக்குகளும்

திரும்பக் கொண்டுவரும்

மூன்று

டானிக்குகளும்

ஒன்றில்

அடங்கியிருக்கின்றன.

இரத்தத்தை அதிகரிப்பது!

உற்சாகமூட்டுவது!

தேகத்தைப் பலப்படுத்துவது!

புட்டி ஒன்று ரூ. 2.

SPENCER & CO.,
Limited.,

Manufacturing Chemists.
MADRAS.

கிளிப்பேச்சு

மீசை முறுக்கும் திவான்கள்

தடி யெடுத்த தண்டக்காரர்

பழைய ஊழல் பெருச்சாளிகள்

வைதீக முண்டங்கள் திமிர்

தெய்வம் பறந்து விடுமோ?



கிளியே, இவ் வாரம் விசே ஷங்களென்ன? காந்திஜி எப் படி இருக்கிறார்?

காந்திஜி சுகமே இருக்கிறார். அவர் ஏற்கனவே பர்தோலிக்குப் புறப்பட்டுப் போய்விட்டாரென்று சொன்னேனல்லவா? பர்தோலியில் சுயராஜ்ய ஆசிரமத்தில் தங்கியிருந்து வருகிறார். காந்திஜி பர்தோலிக்கு 1921ம் வருடம் போயிருந்தார். அதற்குப்பின் இப்பொழுதுதான் பர்தோலியில் கால்வைத்திருக்கிறார். சாரிசௌரா சம்பவம் வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். 1921ம் வருடம் ஏற்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் சாரி சௌராவில் பலாத்காரம் தலைகாட்டியது. பர்தோலியில் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூடி சத்தியாக்கிரக இயக்கத்தை நிறுத்தும்படி ஏற்பட்டது. இதில் பல அபிப்ராய பேதங்கள் எழுந்தன. சாரி சௌரா கலகத்தைக்கண்டு பயந்து, காந்திஜி ஒத்துழையாமையை நிறுத்தியது தவறு என்று சிலர் அபிப்ராயப்பட்டனர். காந்திஜி ஒத்துழையாமையை நிறுத்தாமல் தொடர்ந்து நடத்தி இருந்தால், சுயராஜ்யம் அப்பொழுதே கிடைத்திருக்கும்; காங்கிரசும் வெற்றிக் கொடி நாட்டியிருக்குமென்று வேறு சிலர் அபிப்ராயப்பட்டார்கள். அந்த அபிப்ராயபேதம் எப்படியோ இருக்கட்டும்; அஹிம்சையும், சத்தியமுமே உருவான காந்திஜிக்குப் பலாத்காரம் பிடிக்கவில்லை. அதனால்தான் காந்திஜி ஒத்துழையாமைப் போராட்டத்தை அகாலத்தில் நிறுத்தினர். அன்று பர்தோலியில் கால் வைத்த காந்திஜி இப்பொழுது பர்தோலியில் மீண்டும் கால் வைத்திருக்கிறார். அதிலும், முக்கியமான ஒரு சம்பவத்தின்போது அவர் அங்கு சென்றிருக்கிறார். 1932ம் வருடம் ஏற்பட்ட சட்ட மறுப்புப் போரில் பர்தோலி தலை சிறந்து விளங்கியது. சர்தார் படேல் தலைமையில் பர்தோலி இந்திய சர்க்காரைப் பணிய வைத்தது; பிரிட்டிஷ் சர்க்காரை திணறும்படி செய்தது. சட்டமறுப்புப் போரில் ஈடுபட்டு வரி கொடுக்க மறுத்த பல விவசாயிகளின் நிலங்களை பம்பாய் சர்க்கார் பறிமுதல் செய்தார்கள். அப்பொழுதுகூட சர்தார் பட்டேல் என்ன சொன்னார்? "இந்த நிலங்களைக் காங்கிரஸ் சர்க்கார் திரும்பிக் கொடுக்கும் காலம் வரும்! பர்தோலி மக்களே அஞ்சாதீர்!" என்று தைரியம் கூறினர். அவர் ஜோசியம் இன்று பலித்தது. பம்பாயில் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சிக்கு வந்ததும், பறிமுதலான சத்தியாக்கிரகிகள் நிலங்களை திருப்பிக் கொடுத்து விட்டார்கள். அந்த நிலங்களை உழுது பயிரிடும் ஆடம்பர வைபவத்துக்கே காந்திஜி பர்தோலி சென்றிருக்கிறார். அவரே கலப்பையைப் பிடித்து முதன் முதலில் உழுதார். வைபவம் சிறப்பாக நடந்தேறியது. பர்தோலி வெற்றியைக் குறிப்பிடும் ஒரு வெற்றிக் கம்பத்தையும் காந்திஜியே ஆரம்பித்து வைத்தார்.

ரொம்ப சந்தோஷம்; பர்தோலி பாக்யம் பெற்றதுதான்!

ஆமாம், இரு வகையில் பாக்யம் பெற்றது. காந்திஜி பர்தோலியிலிருப்பதால் காங்கிரஸ் காரியக் கமிட்டியும் இப்பொழுது அங்கேயே கூடியிருக்கிறது. 1921ல் கூடிய கூட்டம் எப்படி முக்கியமானதோ, அதேபோல் இப்பொழுது பர்தோலியில் கூடியிருக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டமும் முக்கியமானதென்பதில் சந்தேகமில்லை. ஏனென்னில், முக்கியமான தீர்மானங்கள் இந்தக் கூட்டத்தில் வந்திருக்கின்றன. உதாரணமாக மைனாரிட்டி சமூகங்களின் உரிமைகளைப் பற்றி இந்தக் கூட்டத்தில் முடிவாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தையும் காந்திஜியே தயாரித்திருக்கிறார். முஸ்லிம் லீகுடன் காங்கிரஸ் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமை சம்பந்தமாக ஒரு சமரசப் பேச்சு நடத்தியது. ஆனால் லீகின் இறுமாப்பால் அந்த சமரசப் பேச்சு முறிந்தது. காங்கிரஸ்காரர் இனிமேல் லீகுடன் அவ்வித பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கக்கூடாதெனக் கருதி, முஸ்லிம் மக்களிடமும், இதர மைனாரிட்டி சமூக மக்களுடனும் நேரடியாக சம்பந்தம் வைத்துக்கொள்ளத் தீர்மானித்துவிட்டார்கள். லீகுடன் சமரசம் பேசினது முஸ்லிம்களுக்கு எத்தகைமான உரிமைகள் கொடுக்கப்படுமோ அந்த உரிமைகளையெல்லாம் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். ஆனால், தீர்மானத்தின் முழு விவரமும் தெரியவில்லை. அதை வெளியிடாமலிருப்பதற்குக் காரணமுண்டு. முஸ்லிம்களின் தலைவராகிய கனம் ஆகாகான், காந்திஜியைக் காணப் பர்தோலிக்கு வருகிறார். அவரையும் கலந்துகொள்ள வேண்டுமென்பது காந்திஜியின் நோக்கம். இதர பிரபல முஸ்லிம் தலைவர்களையும், மைனாரிட்டி சமூகங்களின் தலைவர்களையும் காந்திஜி இது சம்பந்தமாகக் கலந்து ஆலோசித்தே இந்தத் தீர்மானம் தயாரித்திருக்கிறார். பெடரேஷன் சம்பந்தமாக வைசிராய் பேச்சு, சமஸ்தானங்கள் நிலைமை, பஜாஜ்மீது தடை, ஒரிஸா சமஸ்தானங்களின் சர்க்கார் ஏஜண்ட் கொலை, வங்காளம்-பீகார் பிரச்னை, அடுத்த காங்கிரஸ் தலைவர் பதவி, இவை முதலிய பல விஷயங்களைக் காங்கிரஸ் கமிட்டியார் ஆராய்ந்து முடிவான தீர்மானத்துக்கு வந்திருக்கிறார்கள். "எல்லைக் காந்தி", கான் அப்துல் கபூர்கான், ராஷ்ட்ரபதி பதவியை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதால், அநேகமாக, அடுத்த ராஷ்ட்ரபதியாக மௌலானா அபுல் கலாம் அஸாத் வரலாம். அவருக்குத்தான் அதிக ஆதரவு இருப்பதாகத் தெரிகிறது.

மெய்தான்; அந்தப் பதவிக்கு மௌலானா அஸாத்தை விடச் சிறந்தவர்கள் தற்போது இல்லை. முஸ்லிமேயாயினும், அவர் ஒரு சிறந்த தியாகி; பெரிய மேதாவி தலைவர் பதவிக்கு, அதிலும், நெருக்கடியான இச்சந்தர்ப்பத்தில் ராஷ்ட்ரபதி பதவிக்கு அவரே முற்றிலும் பொருத்தமானவர். வேறு விசேஷமுண்டா?

ஆம்; ஒரு அக்கிரமமான சம்பவம். பீஹாரில், ஹஜாரிபாக் என்னுமிடத்துக்குச் சமீபத்தில் ஒரு ரயில் வண்டி கவிழ்ந்து தீ பிடித்துக்கொண்டது. அதில் 10 பேர் மாண்டனர். சுமார் 50 பேர்களுக்குக் காயம். இந்த மாதிரி சம்பவங்கள் அடிக்கடி இந்தியாவில் நடந்துவருவது நம்முடைய துரதிர்ஷ்டந்தான். பிறப்போ, இறப்போ, வறுமையோ, செல்வமோ, காற்றோ, மழையோ பணக்காரர், ஏழை யென்று பார்க்கிறதா! உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதைக் கவனிக்கிறதா? ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர் என்ற பேதம் காட்டுகிறதா? எல்லோருக்கும் ஒன்றுதான். ஹிந்துக்களுக்கு ஒரு வெயிலும், ஒரு மழையும், முஸ்லிம், கிறிஸ்துவர்களுக்கு வேறு வெயிலும், மழையுமா இருக்கிறது? எல்லாம் ஒன்றுதான். அப்படி இருக்க ஜாதி, மதப் பிரிவினை எதற்கு? அதற்காக ஏன் கச்சை கட்டிக்கொண்டு போர் தொடுக்க வேண்டும்? இன்று இந்தியா அழிந்தால், எல்லோரும் அழியவேண்டியதுதான்; ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவர், சீக்கியர் எல்லோரும் அழியவேண்டியதுதான். இந்தியா வாழ்ந்தால் எல்லோரும் ஒன்றாக வாழவேண்டியது தான். இதில் விசேஷ உரிமை எதற்கு? எல்லோருக்கும் ஒரே உரிமைதான் வேண்டும்; பெரும்பான்மையானவர்களை சிறுபான்மையோர் நம்பவேண்டும். சிறுபான்மையான சமூகங்களைப் பாதுகாக்க வேண்டியது பெரும்பான்மையோரின் கடமை யென்பதை, பெரும்பான்மையான சமூகத்தார் உணரவேண்டும். இது தான் நீதி; இந்த நீதியை மறந்து, தேசத்தின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடுவது அடி முட்டாள்தனமென்பதில் சந்தேகமில்லை. இவ்வித வகுப்புப் பிரிவினையையும், பேத உணர்ச்சியையும் வளர்ப்பவர் சுயநலமிகளே. அவர்கள் வயிறும்; குடும்பமும் வளர்ந்தால் போதும் ஏழை மக்களைப்பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை. ஆனால், அதே சுயநலமிகள் மக்களைத் தூண்டிவிட்டு அவர்கள் தலையை மிதித்துப் பதவிக்கு வருகிறார்கள். தலைவரென்று மார்தட்டி வீராப்புப் பேசுகிறார்கள். மந்திரி பதவிகளுக்குப் போட்டி போடுகின்றனர். உதாரணமாக சிந்து மந்திரி சபையை எடுத்துக் கொள்ளுவோம். அங்கு அல்லா பக்ஸ் மந்திரிசபையை கவிழ்க்க என்ன சூழ்ச்சி! அல்லா பக்ஸ் மந்திரி சபையில் பெரும்பாலும் முஸ்லிம்களே. என்றாலும், லீக்காரர் அவருடைய மந்திரிசபையைக் கவிழ்க்க பகீரதப்பிரயத்தனஞ்செய்தார்கள். ஆனால், அவர்கள் முயற்சி பலிக்கவில்லை மந்திரி சபைமீது நம்பிக்கை இல்லாத் தீர்மானங்கொண்டு வந்தார்கள். லீக் குட்டு வெளியாயிற்று! திடீரென சிந்துவில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. இதுவரையில் சிந்து சட்டசபையில் லீக் கட்சிக்கு யார் தலைவராக இருந்தாரோ, அவரும், அவருடைய சகாக்களும் லீகிலிருந்து ராஜிநாமா செய்து, அல்லா பக்ஸ் கட்சியில் சேர்ந்துகொண்டார்கள். அல்லா பக்ஸ் மந்திரிசபை பிழைத்தது தம்பிரான் சித்தந்தான்! சிந்துவில் மண்ணைக் கவ்விய லீக்காரர்-அஸாம் மந்திரி சபையைக் கவிழ்க்க இப்பொழுது புதிய சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள். இந்த பிற்போக்கான லீக்காரரை வெள்ளையர் தட்டிக் கொடுத்து வருகின்றனர். அஸாமில் காங்கிரஸ் கூட்டு மந்திரி சபை ஏற்பட்டிருக்கிறது. அந்த மந்திரி சபையில் முஸ்லிம்களுமிருக்கிறார்கள்: இருந்தாலும் என்ன? லீக் மந்திரி

(அடுத்த பக்கம் பார்க்க)

சபை எற்படவேண்டுமென்பது அவர்கள் மூச்சுமுட்டிய ஆசை. லீக்காரர்தான் முஸ்லிம்களா? இதர முஸ்லிம்கள் முஸ்லிம்களல்லவா? தமிழ் நாட்டில் சு. ம. காரர்தான் தமிழர், திராவிடரென்று எண்ணிக் கொண்டிருப்பதுபோல், லீக்காரரும் அவர்களே முஸ்லிம்களென்று இறுமாப்புக் கொண்டிருக்கிறார்கள். லீகின் யோக்யதையைக் காட்ட இதைவிட வேறு உதாரணம் வேண்டுமா?

ஆமாம், சிற்சில சமயங்கள் பதவி மோகம் பிடித்த லீக்காரர் முஸ்லிம் சமூகத்துக்கே துரோகஞ் செய்யவும் பின் வாங்குகிறார்களில்லை. இது முஸ்லிம் சமூகத்தின் தலைவிதி யென்றே நினைக்கிறேன்.

தலைவிதி யென்றுதான் சொல்ல வேண்டும். சிறுபான்மை வகுப்பினருக்கெல்லாம் இந்தத் தலைவிதிதான். இது கடவுள் விதித்த விதியல்ல; சுயநலம் படைத்த தலைவர்களே இதற்குக் காரணம். காங்கிரஸ் என்றால், அது ஒரு ஹிந்து ஸ்தாபனமென்ற தவறான அபிப்ராயத்தை உண்டு பண்ணி வருகிறார்கள். இதை நம்பி பொது ஜனங்கள் மோசம் போகிறார்கள். காந்திஜி பேயுமல்ல; பிசாசுமல்ல அவர் நம்போன்ற ஒரு மனிதர். ஆனால் உத்தமர்; சத்தியவந்தர்; அவருடைய படத்தைப பள்ளிக்கூடங்களில் வைப்பது மத விரோதமென்று சில முஸ்லிம்கள் நினைக்கிறார்கள். ஆனால், பிரிட்டிஷ் மன்னர் படத்தை வைக்கச் சம்மதிக்கிறார்கள்; இது மதவிரோதமாகாதா? காங்கிரசில் கிறிஸ்துவர் சேருவது கூடாது. அது மதத்துக்கு விரோதமென்று சிலர் நினைக்கிறார்கள். மதத்துக்கும், அரசியலுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. கிறிஸ்துவரோ, முஸ்லிம்களோ, அல்லது, வேறு எந்தச் சமூகத்தினரோ, காங்கிரசிலிருந்து ஒதுங்கி இருப்பது உசிதமல். கால சக்கிரம் வேகமாக உருண்டு வருகிறது. பிற்காலத்தில் என்ன நடக்குமோ தெரியாது. சிறுபான்மையினர் இப்பொழுதே பெரும் சமூகத்தினருடன் ஒத்துழைப்பது தான் புத்தி. இந்தியர் என்ற ஒரே எண்ணத்துடன், கஷ்டத்திலும் நஷ்டத்திலும் சமபங்கு பெறுவது தான் நல்லது. ஒதுங்கியிருந்தால் ஆபத்து இந்த ஆபத்தை ஆங்கிலோ-இந்தியர்கூட உணர ஆரம்பித்து விட்டார்கள். வங்காளத்தில் ஆங்கிலோ-இந்தியர்கூடக் காங்கிரசில் சேர்ந்து வருகிறார்கள். டார்ஜிலிங் ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு ஒரு ஆங்கிலோ-இந்தியர் தலைவராகத் தோ்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். இது விசேஷமல்லவா?

சந்தேகமென்ன? காங்கிரசை மும்முரமாக எதிர்த்தவர்கள் ஆங்கிலோ இந்தியர். அவர்கள்கூட இப்பொழுது காங்கிரசின் பலத்தை அறிந்து, காங்கிரசில் சேர முன்வந்திருப்பது விசேஷந்தான்! அது போகட்டும்; சமஸ்தானங்கள் நிலைமை எப்படி இருக்கிறது?

ராஜகோட்டில், சமஸ்தான மக்கள் வெற்றி பெற்றார்களல்லவா!

-: கிளிப்பேச்சு :-

(முன் பக்கத் தொடர்ச்சி)

அந்த வெற்றியைக் காண, அங்கிருந்த திவான் பாட்ரிக் காடெலுக்குப் பிடிக்கவில்லை. அவர் சர்தார் படேலை மிரட்டிப் பார்த்தார்; மீசை முறுக்கினார்; கடைசியாக அவர் மீசை முறுக்கு அவருக்கே வினையாக வந்து முடிந்தது. திவான் பதவியை விட்டுக் கப்பலேறிவிட்டார். ராஜகோட் திவானுக்கு நேர்ந்த கதியே மீசை முறுக்கும் திவான்களுக்கும் இனைக்குமென்பதில் சந்தேகமில்லை. காடெலைப்போல் மீசை முறுக்கியவர்களில், சர். சி. பி. யும் ஒருவர். அவர் இன்னமும் மீசை முறுக்கிக் கொண்டுதானிருக்கிறார். அவருக்குச் சாதகமாக இருக்கிறார் திருவாங்கூர் மன்னரும்; இந்த மன்னர்களைத் தட்டிக்கொடுக்க வைசிராய் யாத்திரை செய்துவருகிறார். கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களுக்குப் போய்விட்டு, வைசிராய் லின்லித்கோ பிரபு மைசூருக்குப் புறப்பட்டுப் போய்விட்டார். திருவாங்கூரில் வைசிராய்க்கு மன்னர் விருந்தளித்தார். அந்த விருந்தில் வைசிராயையும் பிரிட்டிஷ் சர்க்காரையும் புகழ்ந்தார் திருவாங்கூர் பொறுப்பாட்சியைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை இது திருவாங்கூர் மக்களுக்கு பெரிய ஏமாற்றமாயிற்று. சிறையிலிருக்கும் அரசியல் கைதிகள் பலர் இன்னமும் விடுதலையாகவில்லை. சிலர் உண்ணாவிரதமிருப்பதாகத் தெரிகிறது. ஹைதராபாத் சர்க்காருக்குக் கொஞ்சம் புத்தி வந்திருக்கிறது. அங்கு காங்கிரஸ்காரர் பொறுப்பாட்சிப் போராட்டத்தை நிறுத்தியிருப்பதால், நிஜாம் சர்க்கார் எல்லா ராஜீயக் கைதிகளையும் விடுதலை செய்திருக்கிறார்கள். இந்த நல்ல புத்தி வரக் காரணமாயிருந்தவர் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் என்று சொல்லலாம். ஆனால், நிஜாம் சர்க்காருக்கு இது சம்பந்தப்பட்ட வரையில் நல்ல புத்தி வந்தபோதிலும், மாணவர் சம்பந்தப்பட்டவரையில் நல்ல புத்தி ஏற்படவில்லை ஓஸ்மானியா கலாசாலை மாணவர் 'வந்தேமாதரக்' கீதம் பாடுவதற்குத் தடைபோட்டார்களல்லவா? அந்தத் தடையை நீக்க மறுத்துவிட்டார்கள். தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றுகாலெனச் சாதித்து வருகிறார்கள். ஆகவே, சுமார் 200 மாணவர்கள் நிஜாமிலிருந்து நாகபுரி கலாசாலைக்குப் போய்விட்டார்கள். ராஜநந்தகான் பழைய குருடிதான்! அங்கு அமுலிலிருந்து வந்த தடைச்சட்டத்தை சிறிது திருத்தியிருக்கிறார்கள். ஆனால், மன்னர் பிடிவாதமும், திமிரும் தளரவில்லை. சிர்மூர் சமஸ்தான மன்னர் இப்பொழுது சிறை ஆரம்பித்திருக்கிறார். அங்கு அடக்குமுறை தாண்டவமாடுகிறது. பலர் கைதியாயினர். ராண்பூரில் அரசியல் ஏஜண்ட் கொலைநடந்ததல்லவா? அதினால் பொறுப்பாட்சிப் போராட்டம் சிறிது தளர்ந்திருக்கிறது. என்றாலும், அடக்குமுறை வேகம் என்னமோ பழைய நிலைமை தான்!

வேறு விசேஷங்களுண்டா? தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் விசேஷமொன்றுமில்லையா?

தமிழ் நாட்டில் தடியெடுத்த சிலர் தண்டக்காரராயிருக்கிறார்கள். இந்தத் தண்டக்கார உத்தியோகத்துக்கு இரவு பகலாக ஓடியாடித் திரிபவர்கள் யார் தெரியுமா? பழைய கார்ப்பொரேஷன் ஊழல் கோஷ்டியைச் சார்ந்தவர்கள்; காங்கிரசிலிருந்து வெருட்டியடிக்கப்பட்டவர்கள். இந்தப் பழம் பெருச்சாளிகளே இன்று சென்னையில் காலிகளைக் கூட்டிக்கொண்டு அமர்க்களஞ் செய்து வருகிறார்கள். இந்தப் பெருச்சாளிகள் கெட்ட கேட்டுக்குக் கார்ப்பொரேஷன் மெம்பர் பதவி வேறு. காலித்தனத்திலும், காலாடித் தனத்திலும் கவனஞ் செலுத்தும் இவர்களுக்குக் கார்ப்பொரேஷன் நிர்வாக விஷயத்தில் கவனஞ் செலுத்த முடியவில்லை. சிசு சம்ரக்ஷணைத் திட்ட சம்பந்தமான அறிக்கை ஒரு மாதத்துக்கு முன்னாடியே வெளியாகியும், அதைப் படிக்கவோ அதைப்பற்றி யோசிக்கவோ இந்த கோஷ்டியாருக்கு நேரமில்லையாம்! அந்தத் திட்டத்தைப்பற்றிக் கார்ப்பொரேஷனில் விவாதம் வந்தபோது அதை ஒத்திவைக்கும்படி பிடிவாதம் செய்தார்கள். மேயர் மறுக்கவே வெளியேறும் நாடகம் நடத்தினார்கள். இந்தக் கார்ப்பொரேஷன் மெம்பர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய சென்னை வாசிகள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இது மட்டுமா? சென்னையில் இன்று நடக்கும் ஊழல்களுக்கும், அட்டூழியங்களுக்கும் இவர்களில் சிலரே காரணமென்று துணிந்து சொல்லுவேன்.

அதில் சந்தேகமென்ன? சென்னை மக்களுக்கு அது நன்றாகத் தெரியும். தெரிந்திருந்தும் அதை வாய்விட்டு சொல்ல வெட்கப்படுகிறார்கள். அதுதான் மர்மம். வேறு விசேஷமென்ன?

இந்த ஊழல் கோஷ்டிப் பெருச்சாளிகளுக்கு ஜோடி கட்டலாம் சனாதனி வைதிகக் குடுக்கைகளை. ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமைகொடுத்துச் சட்டம் செய்திருக்கிறார்களல்லவா? அந்தச் சட்டத்தை எதிர்க்கவும், ஆலயங்களைப் பகிஷ்கரிக்கவும் சனாதன குடுக்கைகள் புதிய யோசனைபோட்டு வருகிறார்கள். ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை கொடுப்பதால் தெய்வ பக்தி குறைந்துவிடுமாம்! தீண்டப்பட்ட ஆலயங்களுக்குச் சனாதனிகள் செல்லாமல், அவரவர் இடங்களிலேயே கடவுளின் படங்களை வைத்து தெய்வ வணக்கம் நடத்திவர வேண்டுமாம்! என்ன வைதிகத் திமிர்! சனாதனிகளும் வைதீகர்களும், ஹரிஜனங்களும் எல்லோரும் மனிதர்தான். இதில் தீண்டப்படுகிறவர், தீண்டப்படாதவர் யார்? எவருமில்லை. கடவுளுக்கு எல்லோரும் மனிதர்தான். மனிதரில் உயர்வு தாழ்வு கிடையாது. ஹரிஜனங்கள் கோவிலுக்குள் செல்லுவதால் தீட்டுப்பட்டுவிடுமென்று சனாதனிகள் கூறுவார்களேயானால், அதைப்போல முழுமுட்டாள்த்தனம் வேறில்லை. ஹரிஜனங்கள் செல்லும் கோவில்களுக்கு வைதீக முண்டங்கள் போக இஷ்டப்படாவிட்டால், அதனால் தெய்வம் கோவிலிலிருந்து பறந்துவிடாது! எங்கும் நிறைந்த ஆண்டவன் எல்லாக் கோவில்களிலும் இருக்கத்தான் செய்யும். சனாதனிகள் கோவில்களில் மட்டும் விசேஷமாக இருக்கப்போவதில்லை. சனாதனிகளும், வைதீகப் பித்தர்களும் கோவிலுக்கே போகாமல் ஒதுங்கிவிட்டால் இன்னமும் ரொம்பநல்லது. இவர்களைக் கோவிலுக்குள் வரக்கூடாதென சர்க்கார் ஒரு சட்டஞ்செய்தால் அதை நான் சந்தோஷமாக வரவேற்கக் காத்திருக்கிறேன்.

கீழ்க்கண்டவர்களிடமிருந்து

காலண்டர் வரப்பெற்றோம்.

கிருஷ்ணவேணி
221 தங்கசாலை தெருவு,
மதறாஸ்.

தேவர் அண்டு கம்பெனி,
லிங்கி செட்டி தெருவு,
ஜி. டி. மதறாஸ்.

நெல்சன் அண்டு கம்பெனி,
சாமிபிள்ளை தெருவு,
சூளை, மதறாஸ்.

எஸ். வைத்தியா அண்டு கம்பெனி,
ஆண்டர்சன் தெருவு,
ஜி. டி. மதறாஸ்.

கீழ்க்கண்ட இடங்களில்
"தமிழ்மணி" விற்பனைசெய்ய
ஏஜண்டுகள் தேவை
—(0)—

பெங்களூர்	மாயவரம்
பழனி	போடிநாயக்கனூர்
தெய்யூர்	நாசரேத்
காரைக்கால்	திசையன்விளை
திருத்துரைப்பூண்டி	திண்டிவனம்
மானாமதுரை	ஸ்ரீவைகுண்டம்

மானேஜர்:- தமிழ்மணி.

ஸ்பெயின் கதி என்னவாகும்!

முஸோலினி.

ரோமாபுரியில், முஸோலினியைச் சந்தித்துப் பேச, பிரிட்டிஷ் முதன் மந்திரியும், பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி லார்டு ஹலிபாக்ஸும் போயிருக்கிறார்கள். இவர்கள் புறப்படும்போதே சகுனம் சரியாக இல்லை. பிரிட்டனில் வேலையில்லாமல் திண்டாடும் பட்டினிப் பட்டாளம், ஒரு சவப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு வந்து, முதன் மந்திரி பயணத்துக்குக் குறுக்கே போய் நின்ற ஆர்ப்பாட்டஞ் செய்தது ஹிட்லரிடம் சரணாகதியடைந்தது போதாதென்று முஸோலினியிடமும் சரணாகதியடைய சேம்பர்லேன் புறப்பட்டுப் போவது பிரிட்டிஷாருக்குக்கூடப் பிடிக்கவில்லை. பிரிட்டிஷார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், சேம்பர்லேனும், ஹலிபாக்ஸும் ரோமாபுரிக்குப் போகிற வழியில், பாரிசில் இறங்கி, பிரஞ்சு முதன் மந்திரி டலாடியரையும், பிரஞ்சு வெளிநாட்டு மந்திரியையும் கண்டு சுமார் $1\frac{1}{2}$ மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். முஸோலினியிடம் முக்கியமாக எதைப்பற்றிப் பேசுவது, எவ்வளவு தூரம் விட்டுக் கொடுப்பது என்ற விஷயங்களைப்பற்றியே, பிரிட்டிஷ் பிரஞ்சு மந்திரிகள் ஆலோசித்தார்கள்.

ஸ்பெயின் கதி என்ன?

சேம்பர்லேனும், ஹலிபாக்ஸும் ரோமாபுரிக்குச் சென்றதும் அவர்களை, முஸோலினி வரவேற்றார். ஆனால், ஹிட்லருக்குக் கிடைத்த ஆடம்பரமான வரவேற்பு சேம்பர்லேனுக்கு இல்லை. ஏன்? முஸோலினி பெரிய தந்திரி சேம்பர்லேனை ஆடம்பரமாக வரவேற்றால் ஹிட்லருக்குக் கோபம் வரும்; முஸோலினிமீது ஹிட்லர் சந்தேகம்கொள்வார்; ஹிட்லரை விரோதித்துக் கொள்ள அவர் விருப்பவில்லை. முஸோலினி ஸ்பெயின்மீது நெடுங்காலம்கண்வைத்து வருகிறார். ஸ்பெயினைக் கைவசப்படுத்த அவரால் முடியவில்லை. ஸ்பெயின் யுத்தமும் நின்றபாடில்லை. ஹிட்லரோ, ஆஸ்திரியா, ஸுடேடன் பிரதேசங்களைக் கைப்பற்றி, மத்திய ஐரோப்பாவில் பலம் பெற்று வருகிறார். இந்த வயிற்றெரிச்சலை முஸோலினியால் தாங்க முடியவில்லை. ஹிட்லர் அத்துடன் நின்றுவிடவில்லை; ரஷியா ஆதிக்கத்திலிருக்கும் யுக்ரெய்ன் பிரதேசத்தைக் கைபபற்றவும் யோசனை போட்டுக்கொண்டிருக்கிறார். முஸோலினி, ஆப்ரிக்காவிலுள்ள பிரஞ்சு காலனி டூனிஸைக் கைப்பற்ற நினைக்கிறார். டூனிஸை பிரஞ்சு சர்க்கார் ஒருபோதும் இழக்கமாட்டார்கள். இதற்கு ஒரு வழிகாணவே, முஸோலினி, சேம்பர்லேனுடன் கலந்து பேசி வருகிறார். டூனிஸ் முஸோலினி கைக்குப் போகாவிட்டால், அவர் பலாத்காரமாக அதைக் கைப்பற்ற நினைக்கலாம். அப்படியானால், அடுத்த யுத்தத்துக்கு, டூனிஸ், அல்லது யுக்ரேய்ன் காரணமாக இருக்கும். ஸ்பெயினும் அந்த யுத்தத்தோடு தொலைய வேண்டியதுதான்.

முஸோலினி விட்டுக் கொடுப்பாரா? : : : சேம்பர்லேன் காவடி!

பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன், முஸோலினியிடம் காவடி எடுத்துக்கொண்டு போயிருக்கிறார் ஹிட்லருக்குச் சலுகை காட்டியதுபோல், முஸோலினிக்கும் சில சலுகைகள் காட்டி முஸோலினியை வசப்படுத்த நினைக்கிறார். அவர்கள் சம்பாஷணை முக்கியமாக ஸ்பெயினைப்பற்றி இருக்குமென்பதில் சந்தேகமில்லை. சேம்பர்லேன் ஸ்பெயினுக்கு உயிர் கொடுக்கப் போகிறாரா, அல்லது, அதைக் குழி தோண்டிப் புதைக்கப் போகிறாரா? பொறுத்துப் பார்ப்போம்.

அடுத்த யுத்தம்!

அடுத்த யுத்தம் சீக்கிரத்தில் வராது. என்றாலும், அடுத்த மார்ச்சு, அல்லது, எப்ரல் மாதத்தில் அடுத்த யுத்தம் வந்

பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரி லார்டு ஹாலிபாக்ஸ்.

தாலும் வரலாமென, லண்டனிலிருக்கும் அமெரிக்க ஸ்தானிகர் கூறுகிறார். இவர் ஜோசியம் பலிக்குமோ என்னமோ சொல்லமுடியாது. யுத்தம் வந்தாலும் வராதுபோயினும், ஸ்பெயின் யுத்தம் நிற்கப்போவதில்லை. ஸ்பெயினை முஸோலினிக்குத் தத்தஞ் செய்தால், பிரிட்டனுக்குத்தான் ஆபத்து. ஆகவே ஸ்பெயினை இழக்க பிரிட்டன் ஒருபோதும் சம்மதிக்காது. ஸ்பெயினில் யுத்தத்தை நிறுத்தி, இரு கட்சிகளுக்கும், அதாவது, கலகக்காரருக்கும், சர்க்காருக்கும் சமரசத்தை ஏற்படுத்தலாமென்று ஒரு யோசனை போடலாம். அந்த யோசனைக்கு ஸ்பெயின் சர்க்கார் ஒருபோதும் இசையமாட்டார்கள். ஸ்பெயினில ஒரு முடியரசை ஏற்படுத்த யோசனை போட்டால், அதற்கும் ஸ்பெயின் சர்க்கார் இசையமாட்டார்கள். கலகக்காரரை எதிர்த்துத் தோல்வியடைந்தாலும் அடைவார்களேயொழிய ஸ்பெயின் சர்க்கார் ஒருபோதும் கலகக்காரருக்கு விட்டுக்கொடுத்துச் சமரசஞ் செய்துகொள்ளவே மாட்டார்கள். ரோமில் சேம்பர்லேன், முஸோலினியைப் பாராட்டிப் பேசினார்; முஸோலினி சேம்பர்லேனை வானமளாவப் புகழ்ந்தார். இது பரஸ்பர புகழ்ச்சி! ஆனால், உள்ளூ என்ன வினை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ தெரியாது. மத்தியதரைக் கடலில் யார் ஆட்சி செய்வதென்பது அடுத்த கேள்வி. இது சம்பந்தமாக என்ன முடிவுக்கு வருகிறார்களோ சொல்ல முடியாது.

கலகக்காரர் வெற்றி

இதற்கிடையில் ஸ்பெயின் சண்டையோ மும்முரமாக நடந்துவரு

பிரஞ்சு முதன் மந்திரி டலாடியர்.

கிறது. உர்கெல், சமவெளி பூராவும் கலகக்காரர் கைவசமிருக்கிறது. கலகக்காரர் தினசரி 15 மைல் வீதம் முன்னேறி வருகிறார்கள். கடலோனியா முனையில் சண்டை இல்லை. அங்கு அமைதி நிலவுகிறது. இங்கிருந்த கலக விமானங்களும், துருப்புகளும் எஸ்ட்ரமாடூரா போர்முனைக்குப் போயிருக்கின்றன. ஆர்டெவி போர்முனையில் கலகக்காரர் மும்முரமாகத் தாக்கினார்கள் ஆனால், சர்க்கார் துருப்புகளை முறியடிக்க முடியவில்லை இங்கு கலகத் துருப்புகளை சர்க்கார் ராணுவங்கள் வெருட்டி விட்டன கலக விமானங்கள் ரூஸ், டாரகோனா, கார்டஜீனா, பார்ஸிலோனா நகரங்கள்மீது வெடிகுண்டுகளை எறிந்து, அதிக உயிர் சேதத்தையும் பொருட் சேதத்தையும் உண்டுபண்ணின.

சர்க்கார் வெற்றி

எஸ்ட்ரெமாடூரா போர்முனையில் கலகத் துருப்புகள் எவ்வளவோ கடுமையாகப் போராடியும் அவர்களால் கொஞ்சங்கூட முன்னேற முடியவில்லை.



சேம்பர்லேன்.

இங்கு சர்க்காருக்கு நல்ல வெற்றி. கடலோனியா போர்முனையில் கலகக்காரர் மும்முரமாகப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கடலோனில் சர்க்காருக்குச் சிறு வெற்றிகள் கிடைத்தபோதிலும், கலகக்காரரே முன்னேறிக் கொண்டு வருகிறார்கள். கார்டோபா முனைகளில் சர்க்கார் வெற்றிபெற்று வருகின்றனர். டாரகோனா முனையில் $2\frac{1}{2}$ லக்ஷம் ஜனங்கள் வசிக்கும் சுமார் 155 ஊர்களைக் கலகக்காரர் பிடித்திருப்பதாகக் கூறுகின்றனர். ஸ்பெயின் யுத்தத்தைக் கவனிக்கும்போது இரு சாராரும் மும்முரமாகப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்களென்றே சொல்லலாம். முஸோலினி சேம்பர்லேன் சம்பாஷணையில் ஸ்பெயின் சம்பந்தமாக என்ன முடிவுக்கு வருகிறார்களோ தெரியவில்லை. ஸ்பெயினிலிருக்கும் இதாலித் துருப்புகளை வாபஸ் வாங்கும்படி சேம்பர்லேன் வற்புறுத்துவாரெனத் தெரிகிறது.

ஏஜண்டுகள் தேவை

டீ இலைகள் எவ்வளவு உயரத்தில் உற்பத்தி ஆகிறதோ அவ்வளவுக்கும் மணம், குணம் நிறைந்து இருக்கும், ஆசாம் தேசத்திலும், மைசூர், திருவாங்கூர் முதலிய இடங்களில் உற்பத்தியாகும் தேயிலைகள் சமுத்திர மட்டத்திற்கு 3000 முதல் 4000 அடி வரையில்தான் உற்பத்தியாகின்றன, ஆனால், எங்கள் எஸ்டேட் பலரக தேயிலைகள் சமுத்திர மட்டத்திற்கு 7000 முதல் 7500 அடி உயரத்தில் உற்பத்தியானபடியால் மற்ற எல்லா பேர் வாங்கிய தேயிலைகளைவிட மேலானது என்பதற்கு சந்தேகமில்லை. இதை வாங்கி அனுபவித்தவர்களுக்கே இதன் பெருமை தெரியவரும் 25 முதல் 50 ராத்தலும் அதற்கு மேல் தனித்தனி நபருக்கு வேண்டுமானாலும் சப்ளை செய்யப்படும்.

விபரங்களுக்கு:—

ஆல் இந்தியா டிரேடிங் கம்பெனி
17-20, வி. வி. கோவில் தெரு,
பெரியமேட்டு, சென்னை.

தமிழ் மணி

சென்னை—வெகுதானியஞூ தைமீ 2உ (15-1-1939)

பட்டதெல்லாம் போதும்!

சென்னையில் காங்கிரஸ் சர்க்கார் ஆட்சி நடக்கிறது. என்றாலும், சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சியார் அட்டூழியம் தலைவிரி கோலமாகத் தாண்டவமாடுகிறது. அதைத் தட்டி மடக்க ஆச்சாரியார் ஆட்சிக்கு ஆண்மை இல்லை. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்துக், கடைசியில் மனிதனையும் கடிக்க முற்பட்டதுபோல், ஆதியில் சுயமரியாதைக்காரர் ஹிந்தி எதிர்ப்பு என்ற ஒரு போலி எதிர்ப்பை ஆரம்பித்தார்கள். அவர்களைப் பணக்காரரும், ஜஸ்டிஸ் கும்பலும் ஆதரிக்க முற்பட்டார்கள். காங்கிரஸ்மீது வஞ்சந்தீர்க்கக் காத்திருந்த காங்கிரஸ் விரோதிகளும், மறைமுகமாக அவர்களுக்கு உதவி புரிந்து வந்தனர். ஹிந்தி எதிர்ப்பு ஜம்பம் பலிக்கவில்லை. ஜாதித் துவேஷத் தீயை மூட்டிவிட்டார்கள். தமிழன், பார்ப்பனன், ஆரியன், திராவிடன் என்ற அர்த்தமில்லாத புரட்சியைக் கிளறிவிட்டனர். அதுவும் உருப்படவில்லை. இப்போழுது வெறிபிடித்த காலித்தனத்தில் இறங்கி இருக்கிறார்கள். ஹிந்தி எதிர்ப்பு, தமிழர் இயக்கம் என்பதெல்லாம் இப்போழுது காலித்தனமாகவே இருக்கிறது. அந்தக் காலித்தனத்தை முளையிலேயே கிள்ளி எறிந்திருக்கவேண்டும்: ஆனால், ஆச்சாரியார் இதில் தவறிவிட்டார். ஆச்சாரியார் சர்க்கார் பரந்த நோக்கத்துடன் நடந்துகொண்டதே இதற்குக் காரணம். ஆனால், காலிகளின் போக்கு இவ்வளவு கேவலமாக வந்து முடியுமென ஆச்சாரியார் எதிர்பார்க்கவில்லை; வேதாந்தம் பேசினார். அவர் வேதாந்தமே காலிகளுக்கு இன்னமும் அதிகத் தைரியத்தைக் கொடுத்தது. இன்று பகிரங்கமாக அடிதடிகளில் இறங்கிவிட்டார்கள். தமிழர் இரத்தம் பெருக்கெடுத்தோடக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழர் உயிருக்கு ஆபத்து; உடைமைக்கும் ஆபத்து. இந்த நிலைமையில் இனிமேலும், ஆச்சாரியார், பழைய வேதாந்தமே பேசிக் கொண்டிருப்பாரேயானால், காலிகளின் காலாடித்தனத்துக்கு முடிவே இல்லாது போய்விடும்.

எங்கும் கண்டனம்

காலிகளின் அட்டூழியங்கள் சென்னையில் மட்டுமல்ல; தமிழ்நாடு எங்கும் அநேகமாகப் பரவி விட்டது. இந்தக் காலிகளைக் கண்டிக்காத கூட்டங்கள் கிடையாது; வெறுக்காத தமிழர் இல்லை. எனினும், ஆச்சாரியார் இன்னமும் மௌனவிரதமே பூண்டிருக்கிறார். காலாடிகளை அடக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. போலீசாரகூட, இந்தக் காலித்தனத்தை அடக்க முற்படவில்லை. வெளிக்கு அந்தப் புலிகள் ஆர்ப்பாட்டஞ்செய்கின்றன. ஆனால், அந்தரங்கத்தில் அவர்களே, காலிகளைத் தட்டிக்கொடுக்கிறார்களோவென்ற சந்தேகம் ஏற்படுகிறது. இன்றேல், ராஜபுரத்திலும், விருதுநகரிலும் காலிகள் அவ்வளவு மோசமாக நடந்திருக்கமாட்டார்கள். காங்கிரஸ் ஆட்சியில் காலிகளின் அட்டூழியம் நடந்ததும் போதும், தமிழர் பட்டதெல்லாம் போதும், போதுமென்றாகி விட்டது. இனிமேல் இத்துயரம் படமுடியாது. இந்தக் காலித்தனத்தை ஆச்சாரியார் அடக்க வழிதேட வேண்டும்; இன்றேல், தமிழ் மக்களே அவர்கள் உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க வழி தேடிக்கொள்ள வேண்டும். இனிமேலும் விட்டுக் கொண்டே போனால், காலிகள் அத்துமீறிப் போய்விடுவார்கள். தலைக்குமேல் வெள்ளம் ஓடியபின் யார்தான் அதைத் தடுக்க முடியும்? தமிழரே யோசித்து முடிவு செய்துகொள்ளுவார்களாக.

உஷார், உஷார்!

உன்னத பதவியிலிருந்து, அகம்பாவத்தால் கெட்டழிந்த தேவதூதர்களே, சாத்தான்களென்று கிறிஸ்து மதம் கூறுகிறது. மந்திரி முதல், பல உயர்ந்த பதவிகள் வகித்து, கொழுத்த சம்பளம் பெற்று, 'சர்,' 'திவான் பகதூர்' போன்ற பட்டங்கள் பெற்று, இப்போ அவ்வித பதவிகளுக்கும், பணத்துக்கும், பட்டங்களுக்கும் வழியில்லாமல் போகவே, பலர் காங்கிரசை எதிர்க்கப் புறப்பட்டிருக்கிறார்கள். இன்று தமிழ் நாட்டிலும், வடநாட்டிலும், காங்கிரஸை எதிர்த்து, மக்களை ஏமாற்றும் சாத்தான் வேலை செய்பவர்கள் பெரும்பாலும் பதவி மோகம் பிடித்த மாஜி மந்திரிகளும், மாஜி உத்தியோகஸ்தர்களுமே யாவர். காங்கிரஸ்காரர் பதவிக்கு வந்ததைக் காண அவர்கள் சகிக்க முடியவில்லை. பொறுமைப் பேய் அவர்களைப் பிடித்து ஆட்டிவைக்கிறது. ஆகவே, காங்கிரஸின் செல்வாக்கைக் குறைத்து, காங்கிரஸ் சர்க்காரைக் கவிழ்த்துவிட அவர்கள் நினைக்கிறார்கள். அவர்கள் எண்ணம் ஈடேறப் போவதில்லை. என்றாலும், அவர்கள் விஷமப்பிரசாரத்தை விட்டுக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில், விஷயமறியாத தமிழ் மக்கள் இவர்கள் விஷமப்பிரசாரத்தை நம்பி மோசம் போகலாம்.

அந்தரங்க நோக்கம்

காங்கிரஸ் எதிரிகள் இவ்வித விஷமப்பிரசாரஞ்செய்வதற்குக் காரணமென்ன? காங்கிரஸ் மந்திரிகள் ராஜினாமாச் செய்தால், மீண்டும் அப்பதவிகளில் ஒட்டிக்கொள்ள இவர்கள் நினைக்கிறார்கள். இரண்டாவதாக பெடரேஷன் வரப்போகிறது. அந்தப்பெடரேஷனை காங்கிரஸ் பலமாக எதிர்த்துவருகிறது. பெடரேஷனைப் பிரிட்டிஷார் வலு கட்டாயமாக அமுலுக்குக்கொண்டுவந்தால் இந்தியாவில் ஒரு பெரிய நெருக்கடி ஏற்படும். பெடரேஷன் தேர்தலில் காங்கிரஸைத் தோற்கடித்து, காங்கிரஸ் சர்க்கார்களைச் சிதைக்க இவர்கள் நினைக்கிறார்கள். மாகாணத் தேர்தல்களில் காங்கிரஸ்காரர் அபார வெற்றி பெற்றதுபோல், பெடரேஷன் தேர்தலிலும் பெரிய வெற்றி பெறுவார்களேயானால், பெடரேஷனை சுக்கல் சுக்கலாக உடைத்தெறிவது உறுதி. காங்கிரஸ் சர்க்கார்களும் உறுதியாக நிற்கும்; அவற்றை அசைக்க யாராலும் முடியாது. ஆகவே, பெடரேஷன் தேர்தலில் காங்கிரஸைத் தோற்கடிக்கும் அந்தரங்க நோக்கங்கொண்டு எதிரிகள் இப்பொழுதே காங்கிரஸை எதிர்த்துப் பிரசாரஞ்செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த விஷமிகள் வலையில் தமிழ் மக்கள் சிக்கவே கூடாது. இதுவரையில் காங்கிரஸை எவ்வளவு அன்புடனும், உற்சாகத்துடனும் ஆதரித்து வந்தார்களோ அதே உற்சாகத்துடன் தமிழ் மக்கள் காங்கிரஸை ஆதரித்துவர வேண்டியது அவசியமாகும்.

இன்றேல்...?

தேசபக்திக்கும், தியாகத்துக்கும் பேர்போனவர்கள் தமிழர். தமிழ் மக்கள் காங்கிரஸை ஆதரித்தே தீருவார்களென்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், தேசத்துக்கு அணுவளவு நன்மை ஏற்பட வேண்டுமேயானால், அது காங்கிரஸ் சர்க்காரால் மட்டும் முடியுமேயொழிய வேறு எந்த சர்க்காரலும் முடியாது! மக்கள் காங்கிரஸை ஆதரிக்காமல் வேறு கட்சியினரை ஆதரிப்பார்களேயானால், தேசத்துக்குப் பெரும் கஷ்டங்கள் விளையும். கவைக்குதவாத பெடரேஷனை பிரிட்டிஷார், இந்தியர் தலைமீது கட்டாயமாக சுமத்தியே தீருவார்கள். அப்படியானால், அதாவது, பெடரேஷன் தேர்தலில் காங்கிரஸ்காரர் தோல்வியடைவார்களேயானால் மாகாண சுய ஆட்சியிலிருக்கும் அற்ப சொற்ப உரிமைகளும் பறி போய்விடும். இந்தியர் மீண்டும் அடிமைகளாகவேண்டியதுதான். இந்தியர் அடிமை விலங்கை இந்தப் பெடரேஷன் இன்னமும் இறுகப்பூட்டி விடும். இன்னம் பல தலைமுறைக்கு இந்தியர் 'சுதந்திரமென்ற பேச்சையே எடுக்க முடியாது. தமிழர் இந்தத் தேசத் துரோகிகளுக்கு இடம் கொடுக்கப் போகிறார்களா? ஒருபோதுமில்லை. தமிழரே உஷார்!

ஊரைக் கெடுக்கும் ஊமை!

ஊமை ஊரைக் கெடுக்கும், பெருச்சாளி வீட்டைக் கெடுக்கும் என்பார்கள். கிழப் பெருச்சாளி சேம்பர்லேன் உலகத்தையே கெடுக்க நினைக்கிறார்! அதற்காக அவர் உறவாடிக் கெடுக்கும் பஞ்சதந்திரத்தில் இறங்கியிருக்கிறார். இதர தேசங்கள் எக்கேடு கெட்டாலும் அதைப்பற்றிப் பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேனுக்கோ, அல்லது, பிரிட்டிஷாருக்கோ கவலை இல்லை. பிரிட்டனுக்கு ஆபத்து வரக்கூடாது; பிரிட்டிஷார் வாயிலும் மண்விழக் கூடாது. பிரிட்டனே இதர தேசங்களைவிட மகாப் பலம் பொருந்திய தேசமாக விளங்கவேண்டும். அதற்காக முனிச்சுக்குக் காவடி எடுத்துக் கொண்டு ஓடினார் சேம்பர்லேன். முனிச்சில் ஹிட்லருக்குச் சரணாகதியடைந்தார் ஜெக்கோவிலுள்ள ஸுடேடன் பிரதேசங்களை ஹிட்லருக்குப் பலி கொடுத்தார். இப்பொழுது ரோமாபுரிக்கு முஸோலினியிடம் காவடி எடுத்துக் கொண்டு போயிருக்கிறார். இந்த யாத்திரையின் பயனாக யார் தலையில் கை வைக்கப் போகிறாரோ தெரியவில்லை.

கிழவன் தந்திரம்!

கிழப் பெருச்சாளியாகிய சேம்பர்லேன் தந்திரம் எவரையும் திடுக்கிடச் செய்யும். சர்வாதிகாரிகளான முஸோலினியும், ஹிட்லரும் ஒன்றுபட்டிருந்தால் அவர்களை மடக்க முடியாது. மேலும், சர்வாதிகாரிகள் ஒழிந்தால், ஜெர்மனியிலும், இதாலியிலும், பாஸிஸ்ட், நாஜியர் ஆட்சி தொலைந்து போகும். சமதர்மக் கொள்கையுடையவர்களே அதிகாரத்துக்கு வருவார்கள்: அவ்வித ஆட்சி ஏற்படுமேயானால் முதலாளிகளுக்கு ஆபத்து. உதாரணமாக ரஷியாவை எடுத்துக் கொள்ளலாம். ரஷியா தலையெடுப்பதைப் பிரிட்டனால் சகிக்க முடியாது: 'ரஷியாவின் தலையையும் தட்டவேண்டும்; சர்வாதிகாரிகளையும் ஒழிக்க வேண்டும். இதற்காகவே சேம்பர்லேன் அவர் முஸோலினிடம் போயிருக்கிறார்: பிரிட்டனுக்கும், இதாலிக்கும் நட்பு அதிகரிக்குமேயானால், ஹிட்லருக்கு அது சாவு மணி அடித்ததுபோலத்தான்: முஸோலினியை நயவஞ்சகமாகப் பேசி, அவரைக் கைவசப்படுத்தச் சேம்பர்லேன் நினைக்கிறார். முஸோலினிக்குச் சில சலுகைகள் கொடுத்து, அவரை வசப்படுத்திக்கொண்டால், ஹிட்லர், முஸோலினி நட்பு உடைந்துவிடும். அதன்பின் தனித்தனி இரு சர்வாதிகாரிகளையும் நசுக்குவது எளிது. சேம்பர்லேனின் அந்தரங்க நோக்கம் அதுதான். ஆனால், சேம்பர்லேன் வலையில் முஸோலினி அகப்படுவாரா? சந்தேகந்தான். முஸோலினியும் ஒரு தந்திரசாலி! சேம்பர்லேன்-முஸோலினி பேச்சு எப்படி முடிவடைகிறதென்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

மணியோசை

ஜே. சி. வர்க்கி,
சென்னை.

கல்வி மந்திரியே,

கல்வி மந்திரியின் பார்லிமெண்டரி காரியதரிசியாக இருந்த உங்களுக்குக் கல்வி மந்திரி பதவி கிடைத்ததைக் கண்டு சந்தோஷிக்கிறேன். காங்கிரஸ் மந்திரி சபையில் கிறிஸ்துவர்களுக்கு ஒரு ஸ்தானம் இல்லாத குறையொன்று இருந்தது. அந்தக் குறை உங்கள் நியமனத்தால் தீர்ந்தது. ஆனல், கிறிஸ்துவர் என்பதற்காக ஆச்சாரியார் உங்களுக்கு இந்தப் பதவி கொடுத்திருக்கமாட்டார். கல்வி விஷயத்தில் உங்களுக்கு நிறைந்த அனுபவமும், ஞானமும் உண்டு. அதை அறிந்தே முதன் மந்திரி உங்களுக்கு இப்பதவி கொடுத்திருக்கவேண்டுமென்பது எனது துணிபு. கல்வி மந்திரி பதவிக்கு நீங்கள் முற்றிலும் பொருத்தமானவர் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் பதவி காலத்தில், கல்வி விஷயத்தில் நல்ல சீர்திருத்தம் செய்வீர்களென்று நம்புகிறேன்.

டிங்—டாங்

முகமதலி ஜின்னு,
பம்பாய்

லீக் தலைவரே,

மாகாண காங்கிரஸ் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு அநேக குறைகளிருப்பதாகவும், அட்டூழியங்கள் பல நடந்து வருவதாகவும் நீங்களும், சில லீக் தலைவர்களும் பிரமாதமாக அறிக்கை வெளியிட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அந்த அட்டூழியங்கள் என்னவென்று கேட்டால் அதையும் தெளிவாகக் கூற மறுத்து வருகிறீர்கள். உங்கள் அறிக்கைக்கு ஜவஹர்லால் சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறார். நீங்கள் மட்டுமல்ல; வங்காள முதன் மந்திரி பஸ்லுல் ஹக்கிற்கும் சரியான போடு போட்டிருக்கிறார். காங்கிரசையோ, முஸ்லிம் லீகையோ சேராத சிலரடங்கிய ஒரு கமிட்டியை நியமித்துக், காங்கிரஸ் சர்க்கார் செய்துவரும் அட்டூழியங்களைப்பற்றி விசாரணை நடத்தலாமென்று ஜவஹர்லால் யோசனை கூறுகிறார். அந்த யோசனையை நீங்கள் ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? அதற்கும் மூச்சுப் பேச்சில்லை. இதிலிருந்து நீங்கள் கூறும் புகார்களெல்லாம் வெறும் கட்டுக் கதைகள்; உங்கள் கற்பனா சக்தியில் உருவானவையென்றே ஏற்படுகிறது. காங்கிரஸ் சர்க்கார் உண்மையில் முஸ்லிம்களுக்குத் துரோகஞ் செய்தால், ஏன் இன்னமும் மௌனஞ் சாதிக்கிறீர்கள்? தைரியமாக வெளிவந்து அந்தத் துரோகங்களை என்னவென்பதை நிரூபியுங்கள். அதுதான் ஒரு உண்மையான தலைவருக்கு அழகு. இல்லேல், உங்கள் அறிக்கைகளெல்லாம் வெறும் பொய்யென்றுதான் கூறுவேன். காங்கிரஸ் சர்க்கார்மீது நீங்கள் வேணுமென்றே இந்தப் பழி சுமத்துவதாகத்தான் ஏற்படும். பொது ஜனங்களும் அப்படித்தான் நினைப்பார்கள்.

டிங்—டாங்

அப்துல் ஹமீத்கான்,
சென்னை.

சு. ம. லீக் வீரரே!

நீங்கள் எந்தக் கட்சி? லீக் கட்சியைச் சார்ந்தவரேயானுல், சுயமரியாதை இயக்கத்தில் உங்களுக்கு என்ன வேலை? நீங்களோ ஒரு முஸ்லிம்; கடவுளிடம் அழியாத பக்தி கொண்டிருப்பவர்கள். சுயமரியாதை இயக்கத்தினரோ நாஸ்திகர். அப்படியிருக்க ஆஸ்திகராகிய உங்களுக்கும், நாஸ்திகராகிய சுயமரியாதைக்காரருக்கும் என்ன சம்பந்தம்? தலாக் காஜருக்கும் கோகுலாஷ்டமிக்கும் என்ன சம்பந்தம் உண்டோ அந்தச் சம்பந்தந்தான் உண்டு! அது ஒரு புறமிருக்கட்டும்; நீங்கள் ஒரு அபூர்வப் பேர்வழி. காற்று எந்த அடிக்கிறதோ அந்த அசைந்து ஆடுவீர்கள். எந்த சர்க்காருஞ்சரி உங்களுக்குப் பதவிதான் வேண்டும். காங்கிரசில் சேர்ந்து கார்ப்பொரேஷனில் மேயர் பதவி பெற்றீர்கள். அதன்பின் கார்ப்பொரேஷனுக்குக் காங்கிரஸ் ரோல் நேர்ந்தெடுக்கப் பட்டீர்கள். ஆனல், தற்போது காங்கிரசிலில்லை; லீகில் சேர்ந்திருக்கிறீர்கள். அப்படியானுல், நீங்கள் செய்யவேண்டியதென்ன? கார்ப்பொரேஷன் மெம்பர் பதவியை முதலில் ராஜிநாமாச் செய்யவேண்டும். அந்த ஆண்மை உங்களுக்கு இல்லை. அதுதான் போகட்டுமென்றுல் ஹிந்தியை ஆதரித்த முதற் பேர்வழிகளில் நீங்கள் ஒருவர். மேயராக இருந்தபோது ஹிந்தியை ஆதரித்துப் பேசியிருக்கிறீர்கள். இப்பொழுதோ ஹிந்தியை எதிர்த்துப் பேசி வருகிறீர்கள். சு. ம. கும்பலோடு சேர்ந்து கொண்டு போடுகிறீர்கள். அது மட்டுமா? பழைய கார்ப்பொரேஷன் ஊழல் பெருச்சாளிகளுடன் சேர்ந்து கொண்டு வெளியாகும் நாடகம் நடத்தி வருகிறீர்கள். உங்கள் கபட நாடகம் இன்னமும் எவ்வளவு காலத்துக்குத்தான் நீடிக்குமோ பார்ப்போம். உங்கள் தட்டு என்றைக்காவது வெளியாவது நிச்சயம். அப்பொழுது உங்களை முஸ்லிம் மக்களும், காங்கிரஸ்காரரும் வெறுத்துத் தள்ளப் போவதும் நிச்சயம். நீங்கள் அநாதை குழந்தை போல் ஒதுங்கப் போவதும் நிச்சயம். மறந்து விடாதீர்கள்!

டிங்—டாங்

பொப்லி ராஜா,
பொப்லி.

ராஜா சாஹேப்,

நீங்கள் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து அடியோடு விலகி விட்டதாகக் கூறுகிறீர்கள். ஆனல், ஜஸ்டிஸ் கட்சியாரோ இன்னமும் உங்களைப் பிடித்துக் கொண்டு ஆடுகிறார்கள். அவர்கள் அட்டூழியங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும், காலித்தனத்துக்கும் உங்கள் பணமே ஊசலாடுவதாகக்கூட ஒரு வதந்தி. இதில் எது உண்மை? நீங்கள் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து விலகி விட்டதாகக் கூறும் உங்கள் வார்த்தையை உங்கள் கடைசி அறிக்கையைக் கொண்டுதான் நம்புகிறேன். ஏனெனில், உங்கள் அறிக்கையில், ஜஸ்டிஸ் கட்சி மகா நாட்டைக் கண்டித்துச் சில வார்த்தைகளிருக்கின்றன. நீங்கள் கண்டிப்பதோடு நின்றுவிடக்கூடாது அந்தச் சனியனை அடியோடு தலை முழுகி விடுவதுதான் நல்லது உங்களுடைய பணமும் மிச்சப்படும். நீங்கள் கட்சியிலிருந்து விலகியது சிலருக்கு அடி வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போலிருக்கலாம். அப்படி வயிறு எரியும் பேர்வழிகள் யார் தெரியுமா? உங்களிடம் பணம் பறித்துத், தின்று, கொழுத்து வந்தவர்கள்தான். நீங்கள் கட்சியிலிருந்து போய் விட்டதற்காகக் கண்ணீர் வடிக்கிறார்கள். நீங்கள் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து போய் விட்டதற்காகவல்ல; அவர்கள் உங்களிடமிருந்து கரந்துவந்த பணம் போய்விட்டதற்காக வேகதறுகிறார்கள். உங்களுக்கு நல்ல காலந்தான். ஆனல், உங்களுக்குப் பதிலாக எந்த ராஜாவுக்குச் சனிகாலம் பிடித்திருக்கிறதோ தெரியவில்லை.

டிங்—டாங்

யமுனலால் பஜாஜ்,
பர்தோலி.

தேசிய வீரரே,

ஜயப்பூர் சமஸ்தானத்துக்குள் போகக்கூடாதென்று சமஸ்தான மன்னர் உங்களுக்குத் தடையுத்திரவு போட்டிருக்கிறார். அந்தத் தடை யுத்திரவை ரத்து செய்யாவிடில் நீங்கள் அந்த உத்திரவை மீறப்போவதாக மன்னருக்கும், அதிகாரிகளுக்கும் அறிவித்திருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம். நீங்கள் தடையுத்திரவை மீறினல் தான் ஜயப்பூர் மக்களுக்கு நல்ல காலம்; அங்கு நடந்துவரும் பொறுப்பாட்சிப் போராட்டம் நிச்சயம் வெற்றி பெறும். அதற்குச் சந்தேகமே இல்லை. ஜயப்பூர் மன்னருக்குக் கேடுகாலம் நெருங்கி விட்டதென்றுதான் நினைக்கிறேன் ஏனெனில், அவருக்கு நல்ல புத்தி இருந்தால், உங்களுக்கு ஒருபோதும் தடையுத்திரவு போட்டிருக்கமாட்டார். உங்களை ஏதோ இளைக்கிளைக் கீரையென்று அவர் நினைத்துவிட்டார் போலும்!

டிங்—டாங்

டாக்டர். முக்கர்ஜி,
சென்னை.

கிறிஸ்துவத் தலைவரே,

உங்களுக்கு வங்காளம்; வங்கக் கிறிஸ்துவர் தலைவர்களில் நீங்கள் ஒருவர். கிறிஸ்துவர்களுக்குப் பொதுவாகக் காங்கிரஸ் என்றுல் பயம். காங்கிரசை ஆதரிக்க அஞ்சினர். ஆனல் இப்பொழுது அந்தப் பயம் தெளிந்து விட்டது. ஏராளமான கிறிஸ்துவர் காங்கிரசை ஆதரிக்க முன்வந்திருக்கிறார்கள் சமீபத்தில் நீங்கள் சென்னையில் பேசியது கிறிஸ்துவர்களுக்கு இன்னமும் அதிக ஊக்கத்தைக் கொடுத்திருக்குமென்று நம்புகிறேன். சர். பன்னீர் செல்வம் போன்ற சுயமரியாதைக் கிறிஸ்துவருக்கு உங்கள் பேச்சு நாராசம்போலிருந்திருக்கலாம். ஆனல், பெரும்பான்மையான கிறிஸ்துவர் உங்களை, ஆதரிப்பார்களென்பது திண்ணம்.

டிங்—டாங்

சர். பன்னீர் செல்வம்,
தஞ்சை.

சு. ம. கிறிஸ்துவரே!

ஐயோ பாவம்! உங்கள் எண்ணத்தில் இவ்வளவு துரிதத்தில் மண் விழுமென்று நான் நினைக்கவே இல்லை. எட்டாத பழத்துக்குக் கொட்டாவி விட்டு என்ன பயன்? இந்திய மந்திரி காரியாலயத்தில், சர். ஏ. ராமசாமி முதலியார் ஸ்தாபனம் காலியாகிறது. அந்த ஸ்தானத்திற்கு நீங்கள் தலைகீழாகக் குட்டிக் கரணம் போட்டு வேலை செய்துவந்ததாகக் கேள்விப் பட்டேன் ரகசியமாகக் கவர்னரிடம் காவடி எடுத்துக்கொண்டு போனதாகவும் கேள்வி. ஆனல், உங்களுக்கு அந்தப் பதவி கொடுத்துவைக்கவில்லை. அந்த அதிர்ஷ்டம் சர். ராமசந்திரராவுக்குப் போய்விட்டதாகத் தெரிகிறது. உங்கள் துரதிருஷ்டத்தை நினைத்து இரங்குகிறேன். சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சிகளைக் கட்டியழுத பலன் இதுதான்! இனிமேலாவது உங்களுக்குப் புத்திவருமென்று நினைக்கிறேன்.

டிங்—டாங்

சர். முகம்மது யாகூப்,
டில்லி.

முஸ்லிம் தலைவரே,

உங்கள் மத பக்தியையும், சமூக உணர்ச்சியையும் பாராட்டுகிறேன், ஆனல், அந்த உணர்ச்சி தேசிய முன்போக்குக்குத் தடையாக இருக்கக்கூடாதென்பதே எனது ஆவல். முஸ்லிம்களை ஒரு சமூகமாகப் பிரித்து வைக்க வேண்டுமென்கிறீர்கள். எந்த சமூகமும் அதனுடன் சேரக் கூடாதென்பது உங்கள் ஆசை. ஒரு தேசத்தில் இது சாத்யமா? பார்ப்பனரைத் தவிர முஸ்லிம்கள் கிறிஸ்துவர், எல்லோரும் தமிழர் என்கிறார் ஜஸ்டிஸ், சு. ம. புலி சர். பன்னீர்செல்வம் நீங்கள் அதை ஒரே படியாக அடித்து முஸ்லிம்களைப் பிரித்து விட்டீர்கள். உங்கள் பேச்சு சு. ம. காரருக்குச் சொல்ல முடியாத கோபத்தை உண்டாக்கியிருக்கிறது. அவர்கள் உங்கள் லீகை எதிர்த்துப் பிரசாரஞ் செய்ய யோசித்து வருகிறார்களாம்! சு. ம. இயக்கத்தில் சேர்ந்திருக்கும் கலிபுல்லா ராவுத்தர் கோஷ்டியார்கூட லீகை அடியோடு பகிஷ்கரித்து, சு. ம. ஜோதியில் இரண்டறக் கலந்துவிடலாமாவென ஆலோசனை செய்து வருவதாகத் தெரிகிறது. இந்த அனர்த்தங்களெல்லாம் உங்களால் வந்ததுதான். இதற்கு என்ன கஷ்டம் வருமோ சொல்ல முடியாது. தென்னாட்டில காலித்தனம் தலை தூக்கியிருக்கும் சு. ம. கள் வடநாட்டிற்கும் வந்துவிட்டால் அப்புறம் ஆபத்துதான். வடநாட்டிலுள்ள ஆரியர் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதுதான்! இன்றேல், வங்காளக் குடாக்கடலில் விழுந்து மடிய வேண்டியதுதான். சு. ம. திராவிடர், அவர்களுக்குச் சொந்தமான வடநாட்டைக் கைப்பற்றலாம் உஷார்! ஜின்னுவுக்கு உடனே தகவல் கொடுங்கள்

டிங்—டாங்

TRADE MARK
Registered.

இழுப்பு இருமலுக்கு
ஸ்டாக்ஸ்:—
சுவாசகாச நிவாரணி
கைகண்ட ஔஷதம்
எங்கும் கிடைக்கும்
ஜி. என். ஸ்டீவர்ஸ் கம்பெனி,
21, எர்ரபாலு செட்டி வீதி, மதராஸ்

டிராலியின்
கமகமவென
பரிமளிக்கும்

கஸ்தூரி
சோப்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

A. V. R. A. அடைக்கப்ப
செட்டியார்
52 பந்தர் தெரு, மதருஸ்.

பிராஞ்சு—மதுரை

ஜப்பான் ஆகாயக் கோட்டை!

உலகத்தை ஜெயிக்கக் கனவு! — சீனு குறுக்கே நிற்கிறதாம்!

சீனமீது ஜப்பான் படையெடுத்து வந்து ஒரு வருடத்துக்கு மேலாகிறது. சொல்ல முடியாத அக்கிரமங்களும், அட்டூழியங்களும், யுத்த தர்மத்துக்கு மாறுன முறைகளைக் கைக் கொண்டுங்கூட, சீனுவை, ஜப்பானியர் இன்னமும் ஜெயிக்கவில்லை. இந்த ஜப்பானியர்தான் உலகத்தை உயிர்ப்பிக்கப் போகிறூர்களாம்! அதற்காக 100 வருடயுத்த திட்டம் போட்டிருப்பதாகவும் தெரிகிறது.

சீனுவில் ஜப்பானியர் முன்னேற்றம் முன்போல தீவிரமாக இல்லை. ஜப்பான் மந்திரிகளில் சுமார் 8 பேர்களும், உதவி மந்திரிகளில் 12 பேர்களும் ராஜினாமா செய்ததே இதற்குக் காரணம். மேலும், ஜப்பான் புதிய மந்திரிகள் இன்னமும் ஒரு திட்டமான முடிவுக்கு வரவில்லை. யுத்தத்தை நிறுத்திச், சீனுவுடன் 'சமரசஞ் செய்து கொள்ள ஜப்பானியர் நினைத்தார்கள் அந்தச் சமரசத்துக்கு ஜெனரல் ஷியாங்-கே-ஷேக் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார். ஆகவே, அந்தச் சமரசப் பேச்சுக்கே இனிமேல் இடமில்லை. சீனர் அனைவரும் ஷியாங்-கே-ஷேக்கை ஆதரிக்க முன்வந்திருக்கிறூர்கள். சகல சீனத் தலைவர்களும், ராணுவத் தலைவர்களும் ஷியாங்-கே-ஷேக்குடன் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறூர்கள். சீனத் துரோகிகள் விஷயத்தில் கண்டிப்பான நடவடிக்கை எடுத்து வருகிறூர்கள். அமெரிக்காவும், பிரிட்டனும் சீனுவுக்கு யுத்த தளவாடங்கள் கொடுத்துதவ முன்வந்திருப்பதால் சீனுவில் புது உயிர் ஏற்பட்டிருக்கிறது ஜப்பானியரை எதிர்த்துத் தீவிரமாக யுத்தஞ் செய்வது, அல்லது, யுத்தத்தில் மடிவதென்று எல்லோரும் உறுதிகொண்டிருக்கிறூர்கள்

டாகஷீமா கனவு!

சீனுவை ஜெயிக்க முடியாமல் திண்டாடும் ஜப்பானியர் உலகத்தை உய்விக்கப் போகிறூர்களாம்! அதற்காக ஜப்பான் ஜெனரல் டாகஷீமா ஒரு 100 வருட யுத்த திட்டம் போட்டிருக்கிறூர். உலகத்தை உய்விக்க, விசேஷமாக ஆசியாவை சீர்படுத்த ஜப்பான் ஏகாதிபத்தியம் அவசியமாம். அதற்காக ஜப்பானியர் சக்திகளையெல்லாம் உபயோகிக்கப்போகின்றனராம். சீன யுத்தம், ஜப்பானியர் எண்ணத்துக்குக் குறுக்கே நிற்கிறது. சீனுவை ஜெயித்ததும், ஜப்பானியர் இந்தப் புண்ய கைங்கர்யத்தில் இறங்க உத்தேசித்திருக்கிறூர்களாம்! ஐரோப்பாவில் தற்போது ஏற்பட்டிருக்கும் நெருக்கடிக்காக ஜெனரல் டாகஷீமா இரங்குகிறூர். உலகம் தற்போதிருக்கும் பரிதாபமான நிலைமையிலிருந்து விடுவிக்கவல்லது ஜப்பான் ஏகாதிபத்தியம் ஒன்றுதானும்!

போதும், போதும்!

ஜப்பானியர் ஆட்சியில் கொரியாவும், மஞ்சுகோவும் படும்பாடு போதும்! சீன யுத்தத்தில் சீனப் பெண்களும்; குழந்தைகளும் நிரபராதிகளும் படும் பாட்டை உலகம் அறியாமலில்லை. உலகில் கேள்விப்பட்டிராத அக்கிரமங்களெல்லாம் சீன யுத்தத்தில் நடக்கின்றன. பெண்களை மிருகங்களினும் கேவலமாக நடத்தும் இந்த ஜப்பானியர்தான் உலகத்தை உய்விக்கப் போகிறூர்களாம். ஜப்பானியரின் மிருகத்தனத்தைக் கண்டிக்காத தேசங்கள் கிடையாது. என்றாலும், ஜப்பானியரைத் தட்டிக்கேட்க ஒரு ஐரோப்பிய தேசமும் முன்வரவில்லை ஐரோப்பிய தேசங்கள் ஜப்பான் விஷயத்தில் பிரவேசிக்கப் பயந்து, ஒதுங்கி இருப்பதால்தான், ஜப்பானியருக்கு இவ்வளவு துணிச்சல் ஏற்பட்டிருக்கிறது. உலகத்தை ஜெயிக்கக் கனவு காண்கிறூர்கள்!

சீனருக்கு வெற்றி

ஷான்ஸி மாகாணத்தின் தென் மேற்கில் கடுமையான போராட்டம் ஆரம்பித்திருக்கிறது. சீனர் பலமாக எதிர்த்தார்கள். ஸீன், புஷீன், டாஸில் என்ற மூன்று முக்கியமான நகரங்களைச் சீனர் பிடித்துவிட்டனர். இதன் விளைவாக மஞ்சள் நதிக்கு அப்பாலிருந்து ஜப்பானியர் சீனத் துருப்புகளைத் தாக்க முடியாமல் திண்டாடுகிறூர்கள்.

சீனரின் புதிய முயற்சி

சீன ஜப்பான் யுத்தம் நீடித்து நடப்பதால சீனர் வர்த்தகம் அதிகமாகக் குறைந்து போய்விட்டது. வர்த்தகத்தைத் தொடர்ந்து நடத்த சீன சர்க்கார் வேலை செய்து வருகிறூர்கள் தற்போது சீனத் தலை நகராக இருக்கும் சுங்கிங்கிலிருந்து பர்மா எல்லைக்கு சுமார் 2000 மைல் தூரமிருக்கும். பர்மா வழியாக வியாபாரத்தை நடத்த 2000 மைல் தூரத்துக்கு ஒரு புதிய வேலை அமைத்து வருகிறூர்கள். அதற்காக சுமார் $1\frac{1}{2}$ லக்ஷம் சீனர் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறூர்கள். ரோடும் முடிவாகிவிட்டது. இந்த வழியாகவே சீனுவுக்கு யுத்த தளவாடங்களைக் கொண்டுவருகிறூர்கள்.

விலை ரூபா 1-0-0

மற்றெல்லா மருந்து ஷாப்புகளிலும்
கிடைக்கும்.



M. A. CHARI & CO.,
Ophthalmic Opticians,
9-9, BROADWAY, MADRAS

ஆப்ரேஷன் தேவையில்லை

தொண்டையிலும்,
நாசித்துவாரங்களிலும்
சதை வளர்ந்தால்

"டான்ஸிலிட்"

அற்புதமாய்க்
குணப்படுத்தும்

இந்த அருமையான மருந்து பயோலாஜிகள் முறைப்படி
கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பெருமையை அதிகமாக விஸ்தரித்து எழுதுவதை நிறுத்திச் சுருக்கிக் காட்டுகிறேம். தற்காலத்தில் தொண்டையில் உள்நாக்கின் இரு பக்கங்களிலும், நாசித்துவாரங்களிலும் சதை வளர்ந்து சுவாஸ அடைப்பை உண்டாக்கும் உபத்திரவங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் சஹஜமாயிருக்கின்றது இந்த வியாதிகளை 'டான்ஸிலிட்' அபூர்வமாகக் குணப்படுத்தும். நிற்க இந்த பரம ஒளஷதம் சாப்பிட ஆரம்பித்தவுடன் ஜலதோஷம், இருமல், அடிக்கடி உண்டாகும் காச்சல் முதலியவைகளையும் போக்கி அபரிமிதமான பசி தீபனத்தை பெருக்கி தேகத்தைப் புஷ்டியாக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஒளஷதம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் ஒரு பாட்டல் வாங்கியுண்டால் இவற்றின் அபார குணம் நன்கு விளங்கும். இல்லையேல் எமக்கு தெரிவித்தால் விபரங்களும் நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்ப சித்தமாயிருக்கிறேம்.

விவரங்களுக்கு:— ஆலன்கிலினிக், இராயப்பேட்டை, மதராஸ்.

வெளி வந்துவிட்டது!
(இரண்டாவது பதிப்பு)

* கனகாங்கி *
அல்லது
கழுகுமலைக் கள்வன்

திருவாளர். நகை-
சோ. தண்டபாணிப் பிள்ளை
அவர்கள் இயற்றியது.

இந்த அரிய துப்பு அறியும் நாவல் ஆரம்ப முதல் முடிவுவரையில் உள்ள ஒவ்வொரு பகுதியும் வாசகர்கள் மனதைக் கவரத் தக்கதே. முதல் அத்தியாயத்தில் பிரஸ்தாபிக்கப்படும் இந்திரஜித்தன் என்னும் கள்வனை இன்னுன் என்று அறிவது வாசகர்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தைத் தரும். ஸ்வந்திரமை மாலையின் அந்தரங்கம் அதைவிட அதிக ஆவலை உண்டாக்கும். கவச்சக் கள்வனது சாமர்த்தியமும், அம்பறியும் ஜெயசீலரின் திறமையும் ஒன்றோடொன்று போராடுவது மிகவும் வியப்பாகும். கனகாங்கியின் புத்திசாலித்தனமும், காதலும் எவர் மனதையும் வசீகரிக்கும் விஷயங்கள் ஒவ்வொன்றும் படிப்போர்க்குத் தம் கண் எதிரே நிகழ்வதுபோல தோன்றும். கண்களைக் கவரும் சித்திரப் படங்கள் அமையப் பெற்றது. வசன நடை கம்பீரமாயும், சுத்தமாயும், சுலபமாயும், இனிமையாயும் அமைந்துள்ளது.

விலை ரூ: 1-12-0

V. S. T. Sawmy & Co.,
VEPERY, MADRAS.

-: சங்கநாதம் :-

பெரும்படை கப்பலேறுகிறது

காலித்தனம் யார் காப்பிரைட்?

திராவிட இரத்தம் கருப்பா, சிவப்பா?

பகைவனிடம் பஞ்சாங்கம்!

சோற்றிலே இருக்கு சொக்கலிங்கம்

சு.ம. ஜுரம் இறங்கி வருகிறது.

(பூம்-பூம்)

ஒரு குழந்தையின் இரத்தத்தைப் பரிசோதித்து அந்தக் குழந்தை குடிகாரனுக்குப் பிறந்ததா, இல்லையாவென்பதைக் கண்டுபிடிக்கும் ரசாயன முறையை ஒரு ரஷிய டாக்டர் கண்டுபிடித்திருக்கிறாராம்! இந்த முறையைப் பற்றிக் கேள்விப்பட்டதும், ஹிட்லரும், முஸோலினியும் நடுங்குகின்றார்களாம்! ஏன் தெரியுமா? இருவரும் யூதவேட்டையாடப் புறப்பட்டிருக்கிறார்கள். ஆரியரல்லாத ஜாதியினரை ஐரோப்பாவிலிருந்தே ஓட்டிவிடக் கங்கணங்கட்டியிருக்கிறார்கள். ஆனால், ஹிட்லரும், முஸோலினியும் பரம்பரையாக யூதர் குலத்தில் வந்தவர்கள். அவர்கள் இருதயத்தில் யூத ரத்தம் கலந்தோடுகிறது. இந்த உண்மையை அந்த ரஷிய டாக்டர் கண்டுபிடித்து வெளியாக்கிவிட்டால் என்ன செய்வதென்று பயப்படுகிறார்களாம்! இதற்காகத்தான் அவர்கள் இருவரும் உயிருக்குப் பயந்து ரகசிய போலீஸ் படைகளையும், ராணுவங்களையும் சதா அருகிலேயே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். எப்பொழுதும் கோட்டைகளுக்குள் பதுக்கிக் கிடக்கும் ரகசியம் இதுதான்! இவர்கள் பயப்படுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. தென்னாட்டில், அதாவது, தமிழ் நாட்டில் சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சியார், ஆரிய வேட்டையாடப் புறப்பட்டிருப்பதாக ஒரு சு. ம. புளுகினி நிருபர் வெகு தடபுடலாக ராய்ட்டர் செய்திகளை அனுப்பிவிட்டார். அந்தச் செய்தி இதாலி, ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் தினசரி பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பிரபலமாகப் பிரசுரிக்கப்பட்டதாக ஐரோப்பிய நிருபர் ஒருவர் எனக்கு எழுதியிருக்கிறார். சு ம. காரரின் ஆரியப் பகிஷ்காரவேகம், ஐரோப்பாவுக்குள் பரவிவிட்டால் என்ன செய்வதென்று ஹிட்லரும், முஸோலினியும் நடுங்குகிறார்கள். சு. ம. வேகத்தைத் தடுக்க, ஹிட்லர் நாஜியர் இயக்கத்தைப் பிரசாரஞ்செய்ய பணமில்லாமல் இந்தியாவுக்குச் செய்திகள் அனுப்பிக்கொண்டிருப்பதாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன.

* * *

நாஜியர், பாஸிஸ்ட் இயக்கம் என்ன தெரியுமா? காலித்தனம்! காலித்தனம் நாஜியருக்குத்தான் "காப்பிரைட்" என்று ஹிட்லர் எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால், அந்தக் காலித்தனம் தமிழ் நாட்டு சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சிக்காரருக்கு "ஆல்ரைட் ரிசர்வட்" என்பதை ஹிட்லர் அறியவில்லை போலும்! நாஜியர் "காபிரைட்" காலித்தனத்தை எதிர்த்து, அந்தக் காலித்தனம் சு. ம. காரருக்கே பூர்ண சொந்தமென்பதை நிலைநாட்ட ஒரு 'சு. ம "பெரும்படை' ஜெர்மனிக்குக் கப்பலேறப் போகிறதாம்! அந்தப் படைக்கு பிரதமதளகர்த்தர், கன்னடம், ஈ வெ. ராமசாமி நாயக்கர், தளகர்த்தர் சர். ரெட்டி நாயுடுகாரு ஜெனரல் சு. ம கிறிஸ்துவர், பன்னீர் செல்வம், உதவி ஜெனரல் ஒரு குமாரராஜா. இன்னும் குட்டி ஜெனரல்கள் பலர் அந்தப் படையில் இருப்பார்களாம்! இந்தப் படை வந்துவிட்டால் என்ன செய்வதென்று ஹிட்லரும், முஸோலினியும் துடிதுடித்துப் போனார்கள். இதற்கு ஒரு யோசனை சொல்லவே பிரிட்டிஷ் முதன் மந்திரி சேம்பர்லேன் ரோமாபுரிக்குப் போயிருப்பதாகக் கேள்வி. தற்காலிகமாக அவர்கள் ஒரு உத்திரவு போடப்போவதாகத் தெரிகிறது சீமைக்கு வரும் எந்தக் கப்பலும், சு.ம.பெரும்படையை ஏற்றக்கூடாது; அப்படியே தெரியாமல் ஏற்றிவிட்டால், அவர்களை ஐரோப்பாவுக்குக் கொண்டுவரக்கூடாது. நடுக்கடலிலே இறக்கிவிட வேண்டும்; இன்றேல், கப்பலையே நடுக் கடலில் மூழ்கடித்துவிட வேண்டும். என்று ஆகாசத் தந்தி மூலம் உலகிலுள்ள சகல துறைமுகங்களிலுமுள்ள கப்பல்களுக்குச் செய்தி அனுப்பியிருக்கிறார்களாம்! இந்த ரகசியச் செய்தி சு ம, பெரும்படைக்கு எப்படியோ எட்டிவிட்டன. ஆகவே, சு ம. பிரதம தளகர்த்தர், ஈ வெ ரா விடுதலையடையும் வரையில் அந்த யோசனையை ஒத்திபோட்டிருக்கிறார்களாம்.

* * *

மனிதருக்கு எத்தனையோ பிறப்புகளுண்டு என்று சொல்லுகிறார்கள். அந்தப் பிறப்பு கல்லோ, புல்லோ, முள்ளோ, கட்டையோ, செடியோ கொடியோ, நாயோ, பேயோ என்னமோ தெரியாது! பிறப்புகள் உண்டோ இல்லையோ அதைப்பற்றி இப்பொழுது விவாதம் வேண்டாம் ஆனால், இந்தப் புறப்பிலேயே இந்த மனித ஜென்மத்திலேயே மேலே கூறிய தினுசுகளைப் பார்க்கலாம். பிறவி என்னமோ மனிதப் பிறவிதான்; அந்தப் பிறவிகளிலேயே எத்தனையோ தினுசுகளுண்டு. நாய்க்குணம், பேய்க்குணம் படைத்தவர்களுண்டு; குரங்கு குணம் படைத்தவர்களுமுண்டு இதுதான் பல பிறவிகளென்பதின் கருத்துப் போலும்! அப்பிறவிகளில், தென்னாட்டு சுயமரியாதைக்காரர் ஒரு தினுசு அந்தக் கோஷ்டியில் எல்லாத் தினுசுகளும் அடங்கியிருப்பதைக் காணலாம். பலவேத ரகங்கள் உண்டு. மிருக காட்சி சாலையில் இல்லையா? அதேபோல சு. ம. கோஷ்டியிலும் பல ரகங்கள் உண்டு. அந்த ரகங்கள் என்னவென்பதைப் பற்றி மட்டும் என்னிடம் கேட்காதீர்கள். தெரிந்தவர்களுக்குத் தெரியும் அந்த உண்மை. தெரியாவிட்டால் நேரில் ஆராய்ந்து தெரிந்து கொள்ளுவதுதான் நல்லது.

* * *

மதங்கள் பொய்; கடவுள் ஏது என்று விதண்டாவாதம் பேசும் சு. ம. காரர், ராமாயணம், பாரதம் முதலிய உயர்ந்த தமிழ் காவியங்களை சுட்டுக் கொளுத்தினார்கள். ராமாயணம் பொய், பாரதம் முழு மோசம் என்று பேசினார்கள். ராமாயணம், பாரதம் மெய்யோ, பொய்யோ அதைப்பற்றி நான் விவாதிக்க வரவில்லை. ஆனால், சு. ம காரருக்கு அக்காலத்தில் கம்பரின் தமிழ் பெருமை தெரியாமல் போயிற்று இப்பொழுதுதான் அந்தப் பெருமையை உணர்ந்திருக்கிறார்கள். திராவிடர், ஆரியரென்ற பேதத்தை அது அடிப்படையாகக் கொண்டிருக்கிறது தமிழர் திராவிடர்! ஆனால், திராவிடர் யார்? திராவிடரென்றால் ஆரியர் என்று தமிழ் அகராதி கூறுகிறதாம்! பிடித்தது சனியன்! தமிழ் அகராதிகளையே சுட்டுச் சாம்பலாக்க சு. ம. காரர் ரகசியமாக வேலை செய்து வருகிறார்களாம்! பகிரங்கமாக தமிழ் அகராதிகளைச் சுட்டுக் கொளுத்தினால் அவர்கள் மானம் போய்விடும்! 'ஹிந்தி வந்ததே, தமிழ் போச்சுதே' யென்று அவர்கள் கூச்சல்போடுவதெல்லாம் வெறும் "ஹம்பக்" என்பது வெளியாகி விடும். தமிழ் அகராதிகளை சுட்டுப் பொசுக்குவதைக் காணத் தமிழர் சகிப்பார்களா? ஒரு போதுமில்லை அதற்காகத்தான் ரகசியமாக இந்த வேலைகளைக் கவனிக்க, சில தாண்களையும், குப்தாக்களையும், ரவஸ்துக்களையும் ஏவிவிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தப் பாவஸ்துக்களுக்கு ஒரு சந்தேகம்; திராவிடரென்றால் ஆரியர் என்று கூறும் அகராதிகளில், ஆரியர் என்பதற்கு என்ன அர்த்தம் குறிப்பிட்டிருக்கிறதென்பதை அறிய, அகராதியைப் புரட்டிப் பார்த்தார்கள் ஆரியர் என்று கூறுவோர் சுத்த மிலேச்சர் என்று குறிப்பிட்டிருந்ததைக்

(அடுத்தப் பக்கம் பார்க்க)

சொக்கநாதன் அல்லது ரங்கன் திருவிளையாடல்

கீழ்கண்ட ஊர்களிலுள்ள "தமிழ் மணி" ஏஜண்டுகளிடம் கிடைக்கும்.

ஊர்காம்	விருதுநகர்
மேலூர்	தருமபுரி

சென்னையில் எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

கண்டு பரவஸ்துவின் முகம் கருத்துப் போயிற்று. ஊமையன் கனவு கண்டது போல் சப்-சிப்பென வாயை மூடிக்கொண்டது. ஏனெனில், அந்தப் பரவஸ்து உள்ளத்தில் ஓடுவது ஆரிய ரத்தமல்லவா? அந்தப் பரவஸ்துவோ, ஒரு சிட்டுக்குருவி ஜன்மம்! சிட்டுக்குருவி முட்டையிட்டுத் தன்னைத் தான் மெச்சிக்கொள்ளுவதுபோல், இந்தப் பரவஸ்தும் தன்னைப் பிரமாதமாக எண்ணிக்கொண்டு, ஆச்சாரியாரையும், மந்திரிகளையும் அறை கூவி அழைத்துக்கொண்டு திரிகிறது. பரவஸ்து, பரவஸ்துதானே! அதின் உடம்பில் ஓடும் ஆரிய இரத்தக் குறும்பும், இறுமாப்பும் அதை விட்டுவிடுமோ? இச்சமயத்தில் எனக்கு இன்னமொரு சந்தேகம் வருகிறது. ஆரியர், திராவிடர் என்னும் துவேஷத்தைக் கிளப்பிவிடும் கன்னடம் ராமசாமி யாரும், தெலுங்கு ரெட்டி நாயுடு காரும், கிறிஸ்துவர் பன்னீர் செல்வம், செட்டி நாட்டு குமார ராஜா முதலியோரும் அவர்கள் வாலைப் பிடித்துக்கொண்டலையும், செட்டிகளும், மட்டிகளும், மன்னார்சாமிகளும் ஆரியரா, திராவிடரா, அல்லது, இரண்டும் கலந்தவர்களா? இந்தச் சந்தேகத்தை யாராலும் நிவர்த்திக்க முடியுமா? சிறந்த நிபுணரான ரஷிய டாக்டரை இது சம்பந்தமாக யோசனை கேட்கலாமென நினைத்திருக்கிறேன். சுத்த இரத்தமா யிருந்தால், இவ்வித சந்தேகத்துக்கே இடங் கொடுக்காது. ஆரியர், சூதர் என்ற பிரிவினையைக் கிளப்பிவிட்ட ஹிட்லரிடமும், முஸோலினியிடமும் சூத்ர இரத்தக் கலப்பு இருப்பதால், திராவிட ஆரியரென்ற துவேஷத்தைக் கிளப்பி விடுவோர்களிடமும் அந்தக் கலப்பு இருக்கலாமோவென்ற சந்தேகம் ஊர்ஜிதமாகிறது.

* * *

என்ன இரத்தமாய் இருந்தாலென்ன? எல்லாம் ஒரு இரத்தந்தானே! ஆரிய இரத்தம் கருப்பு, திராவிட இரத்தம் சிவப்பா? ஆரிய இரத்தத்துக்கும், திராவிட இரத்தத்துக்கும் வித்தியாசமுண்டா, அல்லது பொதுவாக மனிதர் இரத்தத்திலேயே விசேஷமான பேதமுண்டா! நல்ல இரத்தம், கெட்ட இரத்தம், நோய் பிடித்த இரத்தம் என்ற வித்தியாசமிருக்கலாம். இதைத் தவிர வேறு வித்தியாசமிருக்காதென்றே நினைக்கிறேன். இந்திய மக்கள், ஏன் உலக மக்கள் எல்லோரிடமும் சிவப்பு இரத்தந்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. சுத்த இரத்தம் இல்லாதவர்களே இரத்தத்தில் பேதம் காண்பார்கள். அவர்கள் புத்தியே ஒரு நிலையில் நிற்பதில்லை. அவர்கள் புத்தியில் அடிக்கடி கோளாறு ஏற்படுவதும், நிமிஷத்துக்கு நிமிஷம் கொள்கை மாறுவதும், பல்டி அடிப்பதும் சுத்த இரத்தம் இல்லாததால்தான். தமிழர் இந்த மூளைக் கோளாறு பிடித்தவர்களின் பேச்சுக்குச் செவிசாய்க்கக் கூடாதென்பதே எனது வேண்டுகோள். இல்லையேல், மூளைக் கோளாறு பிடித்த இந்தச் சிறு கூட்டம் 2 கோடித் தமிழ் மக்களையும் முட்டாள்களாக்கி, அவர்களுக்கு முட்டாள் பட்டமும் கொடுத்துவிடுவார்கள்.

சங்க நாதம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

* * *

தமிழர் இருக்கிறார்களா, இறந்துவிட்டார்களா, என்று மூளைக்கோளாறு பற்றிய ஒரு சு. ம. பத்திரிகை கேட்கிறது. தமிழர் இறந்துவிடவில்லை; இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், இருந்தும், இறந்தது போலவே இருக்கிறார்கள். இல்லாமற்போனால், கேவலம், ஒரு கைப்பிடியளவுள்ள சு. ம. காலிகள், தமிழர் மண்டையை உடைப்பதையும், தமிழரை அவமானப் படுத்துவதையும் அவர்கள் சகித்துக்கொண்டிருப்பார்களா? சென்னையில் இந்தமாதிரி காலித்தனங்கள் பல நடந்திருக்கின்றன; இன்னமும் நடந்துகொண்டிருக்கின்றன. கும்பகோணத்திலும் சு ம காலிகள் இந்த அட்டூழியத்தில் இறங்கி இருக்கிறார்கள். கும்பகோணத்தில், அவர்கள் கும்பகோணம் பலிக்கவில்லை! விருதுநகரில் தான் காலிகளின் அட்டூழியம் அத்துமீறி யிருக்கிறது. போலீசார் சிலர் இருந்தும் பொம்மைகளைப்போல் அசையாது நின்றார்களாம்! விருதுநகரில் ஒரு வாசகசாலை விழா கூட்டத்தின்போது சுமார் 50 காலிகள் நுழைந்து, வாலேயிட்டு, ஜனங்கள் மீது கல்லெறிந்திருக்கிறார்கள். பலருக்கு மண்டை உடைந்து இரத்தப் பெருக்கெடுத்தோடி யிருப்பதாகத் தெரிகிறது. பேசிக்கொண்டிருந்தவர்களைப் பிரசங்கைப்பற்றிப் பேசும்வரையில் காலிகள் அடித்திருக்கிறார்கள். இந்தக் காலித்தனத்தை விருதுநகர் வாசிகள் சகித்துக்கொண்டிருப்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது. விருதுநகர் தமிழர் உயிருடனிருக்கிறார்களா? அவர்கள் உயிருடனிருந்திருந்தால் இந்த அக்கிரமம் அங்கு நடந்தே இருக்காது. விருதுநகரில் நடந்த காலித்தனத்தைக் காணும் எந்தத் தமிழனின் இரத்தமும் கொதிக்கும். விருதுநகர தமிழர் இரத்தம் கொதித்ததா, அல்லது, மேகஜிக்காமல் தண்ணீர் போல குளிர்ந்திருந்ததா தெரியவில்லை. விருதுநகர் மக்கள் இவ்வித காலித்தனத்துக்கு இடம் கொடுத்துக்கொண்டிருப்பது அந் நகருக்கே ஒரு பெரிய இழிவாகும். விருதுநகர மக்கள், ஏன் தமிழ் மக்கள் அனைவருமே, இரண்டு கோடித் தமிழ் மக்களுமே இக்காலிகள் விஷயத்தில் இனிமேல் விழிப்பாக இருப்பார்களென்று நினைக்கிறேன். தமிழ் மக்கள் இப்பொழுதே விழிக்காவிட்டால், இது தமிழ் மக்கள் கழுத்துக்கே கத்தியாக வந்து முடியுமென்று எச்சரிக்கிறேன்.

* * *

கல்வி மந்திரியாயிருந்து, தற்போது கோர்ட், சிறை மந்திரியாக இருக்கும் டாக்டர் சுப்பராயன் கல்கத்தாவில் பேசியபோது, "ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சகல வகுப்புகளிலும், சகல பாடங்களையும் ஆங்கிலம் மூலம் கற்றுக்கொடுத்துவந்தபோதிலும் தமிழ் செழித்தே வந்திருக்கிறது" என்று கூறினாராம். இது ஒரு சு. ம பத்திரிகைக்கு ரொம்ப ரோஷத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது. டாக்டர் சுப்பராயன் கூறியதில் தவறு என்னவிருக்கிறது? இதற்காகத் தமிழருக்கு ரோஷமில்லையா, தமிழரே செத்துவிட்டீர்களாவென்று அது ஒப்பாரி வைக்கிறது. அட அசடே! நூறுவருடங்களுக்கு மேலதிகமாக ஆங்கிலம் தமிழை விழுங்கப்பார்த்தது; தமிழ் சாகவில்லை; அதுமேன்மேலும் செழித்தே வந்திருக்கிறது இன்னொரு பாஷையாக இருந்திருக்குமேயானால், அது இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடியிருக்கும். தமிழின் தெய்வீக சக்தி இதில் தான் அடங்கியிருக்கிறது. அந்தத் தெய்வீகத்தன்மையை அறியாத முண்டங்களே இன்று தமிழ் போச்சேயென்று கூச்சல் போடுகின்றன. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னடியே வடபாஷைகள் தமிழ் நாட்டில் தோன்றின. தமிழ் செத்துவிட்டதா? இல்லை; வடபாஷையைத் தன்னுள் அடக்கிக்கொண்டு தமிழ் செழித்தே வந்திருக்கிறது. 100க்கு 50, 80, 85 வீதம் தமிழில் அந்த வார்த்தைகளைப் புகுத்தியது யார்? தமிழர்தான். அதனால், தமிழ் கெட்டுவிட்டதா? அதின் இயற்கை மணம் போய்விட்டதா? ஒருபோதுமில்லை.

* * *

இன்று இந்த ஆர்ப்பாட்டஞ் செய்யும் ஜஸ்டிஸ் கட்சியார், 15 வருட காலமாக ஆட்சியிலிருந்தபோது, தமிழைப்பாதுகாக்க என்ன செய்தார்கள்? அப்போது அவர்கள் மூளை எங்கேபோயிருந்தது? உத்தியோகங்களுக்கும், சுயநலத்துக்கும் கடன் கொடுத்திருந்தார்களா? இன்று உத்தியோகம் போனவுடன் தமிழ் போச்சே யென்று கொக்கரிக்கிறார்கள். ஜஸ்டிஸ், சு. ம. காரரின் உதயோகந்தான்போயிற்று. ஆனால், தமிழ் ஒருபோதும் போகாது அது என்றும சிரஞ்சீவியாக இருக்கும் சு. ம. சண்டெலிகளால் அந்தத் தமிழைப் பாதுகாத்துவிட முடியாது. ஆங்கிலம் வேண்டிப, ஆங்கிலமே பொதுப் பாஷையாக இருக்கவேண்டுமென்று இன்றளவும மடிராங்கியாகப் பேசிவரும் சுயமரியாதைத் காரருக்குத் தமிழரைப் பற்றிப்பேச என்ன யோக்யதை இருக்கிறதென்று கேட்கிறேன். காங்கிரஸ் சர்க்கார் தமிழைக் கொலை செய்ய மாட்டார்கள்; அதை வளர்ப்பார்கள்; அதற்குச் சந்தேகமே வேண்டாம. காங்கிரஸ்காரர் தமிழுக்கு வளர்ச்சி தேடுவார்களா இல்லையா என்பதைப் பொறுத்துப் பார்க்க வேண்டும். அதற்கு சு. ம. காரரிடம் பஞ்சாங்கம் கேட்கவேண்டியதில்லை பகைவனிடம் பஞ்சாங்கம் கேட்டால், அவன் என்ன சொல்லுவான்? சு. ம. பஞ்சாங்கமும் அப்படித்தானிருக்கும். தமிழர் சு. ம. காரர் பஞ்சாங்கத்தை நம்பி மோசம் போகக் கூடாது.

* * *

சு. ம. பஞ்சாங்கம் பத்திரிகைகள் எப்படியும் திரும்பும். அந்தப் பத்திரிகைகளில் ஆசிரியர் பதவியில் வீற்றிருப்போர் பேனா முனை பணங்கொடுத்த பக்கம் திரும்பும்! பேனா முனை மட்டுமல்ல; அடிப்பாங்கூடப் பணத்துக்குத் தகுந்தாற்போல் எழுதும். இன்று காங்கிரசைத் திட்டும் அதே பேனா முனை காங்கிரசைப் போற்றி எழுதிய காலமுண்டு. அந்த பேனாக்களுக்கும் பேனா பிடித்து எழுதுவோருக்கும் கொள்கை ஏது, இழவேது! எல்லாம் பணம்! பணத்துக்குள்தான் எல்லாம்அடங்கியிருக்கிறது!! ஈட்டி எட்டிய மட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்! சு. ம. பத்திராதிபர் பேனா முனை பணம் கொடுத்த அளவுக்குப் பாயும். இன்று சுயமரியாதை, ஜஸ்டிஸ் கட்சியை தாங்கி எழுதுகிறார்கள். எதற்காக? பணத்துக்குத்தான். ஆற்றிலே நின்று அரோஹரா என்றாலும் சோற்றிலே இருக்கு சொக்கலிங்கம் என்பார்கள். இவர்கள் சொக்கலிங்கமெல்லாம் அந்தப் பணத்தில்தானிருக்கிறது; இனிமேலும் இருந்துகொண்டிருக்கும். அதற்குச் சந்தேகமே வேண்டாம்.

* * *

சு. ம. பத்திரிகைகளின் வேகமும் தலைவர்களின் வேகமும் சற்றுக் குன்றி இருக்கிறது. பழைய வீராப்பைக் காணோம். நாடி தளர்ந்து வருகிறது. இது ஏனென்று விசாரித்தவகையில் பணத்துக்குக் கொஞ்சம் பஞ்சமென்று கேள்விப்பட்டேன். பணம் கரக்கும் பொப்லி போன்றவர்கள் ஒதுங்கிவிட்டார்கள். பணம் வைத்திருந்தவர்களும் அகப்பட்டவரையில் சுருட்டிக்கொண்டு "ரெஸ்ட்" எடுத்து வருகிறார்கள். ஆகவே, பிரசாரத்துக்கோ, மறியலுக்கோ ஆள் அகப்படுவது கஷ்டமாக இருப்பதாகக் கேள்வி. சிறைக்குப் போய்விட்டு வந்த தாய்மார்களும், அண்ணாத்தைகளும் சோர்ந்துவிட்டார்கள். இனிமேல் பேச்சோடு சரி; சிறை என்பதெல்லாம் வெறும் பேச்சு என்று தீர்மானித்து விட்டார்கள். ஜஸ்டிஸ், சு. ம. மகாநாடு முடிவோடு இவர்கள் ஊரமும், ஜன்னிக் கோஷ்டமும் இறங்கிவிடுமென்று நான் ஏற்கனவே கூறியிருந்தேனல்லவா? அந்த ஜோசியம் பலித்துவிட்டது!

சிக்காகோ சர்வகலாசாலையில் ரசாயனப் பண்டிதராக இருக்கும் ஸ்ரீ. லியோனர்டு ஒருவித மருந்தைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த மருந்தை ஒரு திருடனின் தேகத்தில் இஞ்செக்ஷன் செய்து விட்டால் அவன் பொய்சொல்லவே முடியாது உள்ளதை உள்ளபடி கூறிவிடுகிறான்.

பிரிட்டன் கழுத்துக்குக் கத்தி!

பிரான்ஸும் தப்பிவிடவில்லை

ஐரோப்பிய அரசியல் நாடகம் வர வர மோசமாகிக்கொண்டு வருகிறது ஒன்றையொன்று விழுங்கத் தருணம் பார்த்துக்கொண்டிருக்கின்றன 1939ல் இந்த நெருக்கடி இன்னமும் முழு மோசமாகுமென்பதற்கு அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன. யுத்தம் ஆரம்பிக்கவில்லையே யொழிய சகல நாடுகளும் யுத்தத்துக்கான ஏற்பாடுகள் யாவும் செய்து வருகின்றன. அவை யாவும் இப்பொழுது விமானப் படையில்தான் விசேஷ கவனம் செலுத்தி வருவது கண்கூடு. சென்ற வருட மட்டும் ஐரோப்பிய தேசங்கள் சமார் 66 கோடி பவுன் விமானப் படைகளுக்காகச் செலவு செய்திருக்கின்றன. எதிரி தேசங்கள் படையெடுத்துவந்தால், வெடி குண்டுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும், விஷப் புகையிலிருந்து உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவும் தற்காப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றன. கோடிக் கணக்கில் விஷப்புகை மூடிகளையும் தயாராக்கிக்கொண்டு வருகிறார்கள். விஷப் புகையிலிருந்தும், வெடி குண்டுகளிலிருந்தும் தப்பித்துக்கொள்ளுவதற்கு இப்பொழுதே பழக்கம் கொடுத்து வருகிறார்கள்.

ஹிட்லர் சதி!

இச் சந்தர்ப்பத்தை ஹிட்லர் சாதகமாக்கிக் கொண்டார்; பிரிட்டனையும், பிரான்சையும் பழிவாங்கக் கருதி, அந்த இரு தேசங்களின் கழுத்தில் கத்திவைக்க அந்தரங்கத்தில் வேலைசெய்து வருகிறார்.



பிரிட்டனுக்கும், பிரான்சுக்கும் கழுத்தில் கத்தி வைக்கிறார் ஹிட்லர். என்றாலும், பிரிட்டன் ஹிட்லரைச் சரிப்படுத்தி, அவர் காலில் சரணாகதியாக விழ முயற்சிப்பது வேடிக்கைதான்!

1939ம் வருடத்திலாவது ஐரோப்பாவில் சமாதான அறிகுறி தென்படாதாவென பலர் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால், அவர்கள் ஏமாறுவது நிச்சயம். சென்ற வருடத்தைவிட இந்த வருடத்தில் ஐரோப்பா நெருக்கடி முழுமோசமாக இருக்குமென்று தெரிகிறது. பிரிட்டன், பிரான்ஸ், இதாலி, ஜெர்மனி, ருஷியா முதலிய பெரிய வல்லரசுகளுக்குள் தான் போட்டாபோட்டி மும்முரமாக விருக்கிறது இதில் இதாலியும், ஜெர்மனியும் ஒன்று. பிரிட்டனும், பிரான்சும ஒரு பக்கம் என்றாலும், அந்த இரு நாடுகளும் சுயநலத்தில் கண்ணாயிருப்பதால், அவைகளுக்குள் உண்மையான ஒற்றுமை இல்லை யென்றே யொன்று சந்தேகிக்கிறது. இந்நிலைமையைக் கண்ட ஹிட்லரும், முஸோலினியும் பிரிட்டன், பிரான்ஸ் இருநாடுகளின் கழுத்துக்குக் கத்தி வைக்கச் சதிசெய்து வருகிறார்கள்.



ஹிட்லரும், முஸோலினியும் ஆயுத பலத்தில் இன்று உலகத்தை மிரட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதே ஆயுத பலம் அவர்களுக்கே கேடாக வந்து முடியுமென்பது நிச்சயம்

ஸ்பெய்ன் யுத்தத்தின் ரகசியம் இதுதான். ஸ்பெய்னில் கலசக்காரரைத் தூண்டி விட்டு, ஸ்பெய்னை அல்லோல கல்லோல நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார். ஸ்பெய்னில் உள்நாட்டு யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போதே, ஸ்பெய்ன் கடற்கரையோரங்களில் ஹிட்லர், யுத்தக் கப்பல்களைக் கொண்டுபோய் வைக்கத் திட்டம் போட்டு, ஆங்காங்கு சில கடற்படை ஸ்தலங்களைக் கட்டிவருகிறார். ஸ்பெய்னில் வட கடற்கரை யோரங்களில் மூன்று ஜெர்மன் கடற்படை ஸ்தலங்களை ஏற்பாடு செய்துவிட்டார். ஜிப்ரால்டர், மத்திய தரைக் கடலுக்கு ஒரு வாசல் போன்றிருப்பது. 'ஜிப்ரால்டரே பிரிட்டனின் பக்கபலம் அந்த ஜிப்ரால்டர்மீது ஹிட்லர் கண் வைத்து, ஜிப்ரால்டருக்கு மேற்கிலும், கிழக்கிலுமாக சில கடற்படை ஸ்தலங்களை ஏற்பாடு செய்திருக்கிறார். செவைல், மலாகா முதலிய இரு கடற்கரை நகரங்கள் தற்போது ஹிட்லர் ஆதிக்கத்திலிருக்கின்றன. அங்குதான் ஏராளமான ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல்களையும், "யு-போட்" என்னும் சிறு

ஹிட்லர், முஸோலினி சதி

யுத்தக் கப்பல்களையும் சண்டைக்குத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார். இந்தக் கடற்படை ஸ்தலங்கள் யாவும் பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் கழுத்தில் கத்தி வைத்ததுபோலாகும். இந்த ஸ்தலங்களில் ரகசியமாக வேலைகள் நடந்து வருகின்றன. நீர் மூழ்கிக் கப்பல்களையோ, யு-போட்களையோ, அல்லது, சாமான்களையோ யாரும் வெளியிலிருந்து காண முடியாது கடலிலிருந்துஞ் சரி, ஆகாயத்திலிருந்துஞ் சரி, அந்த நிலையங்களைத் தாக்கவும் முடியாது. அவ்வளவு முன்னெச்சரிக்கையுடன் வேலை செய்து வருகிறார். யுத்தம் ஆரம்பித்துவிட்டதென்றே வைத்துக் கொள்ளுவோம் யுத்த காலத்தில் சேதமடைந்த யுத்தக் கப்பல்களையும், நீர் மூழ்கி, யு-போட்களையும் உடனே பழுது பார்க்கக்கூடிய சாதனங்களையும் அங்கு ஏற்பாடு செய்திருக்கிறார். கோட்டைகளையும் அங்கு ஏராளமாகக் கட்டி வருகிறார். யுத்தத்துக்கு வேண்டிய பெரிய பீரங்கிகளும், டாங்கிகளும் அங்கு தயாராக வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்பெய்ன் யுத்தம் ஒரு பக்கம் நடந்துகொண்டிருக்கும் போதே, ஹிட்லர் இந்த யுத்த ஏற்பாடுகளைச் செய்துகொண்டு வருகிறார். அதாவது, பிரிட்டன் பிரான்ஸ் முதலிய இரு தேசங்களையும் நோக்கிக் கைத்துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொண்டிருக்கிறார். அந்த இரு நாடுகளுக்கும் எப்பொழுது ஆபத்துவருமோ சொல்ல முடியாது. என்றாலும், பிரிட்டனும், பிரான்சும் ஹிட்ல

(அடுத்த பக்கம் பார்க்க)

ஒரு வாரம் வரையில் ரூ. 5.
முந்துங்கள்.

ரசமணி

இது அபூர்வமானது இதனால் அதிர்ஷ்டம் உண்டாகி செல்வ, தொழில் பரீக்ஷையில் வெற்றி புத்திர பாக்கியம் உண்டாகும்.
தாது பலமில்லா கிழவர்களும் தாது புஷ்டியில் கிருஷ்ணலீலையை அடைவார்கள். இந்திரியம் இறுகி மணியாகும்.
மணி 1-க்கு ரூ. 10.
K. S. பதி மெடிகல் ஹால்,
பழனி. S. I.

காரம், மணம், குணம், நிறம், ஒருங்கே அமைந்த
வி. என். ஷண்முகம்
பட்டணம் பொடியை
எப்பொழுதும் உபயோகியுங்கள்
நெ. 8, ஆச்சாரப்பன் சந்து, மதராஸ்.
(ஏஜண்டுகள் தேவை)

ரைப் போற்றுகின்றன. அவர் சொல்லுக்குப் பணிந்து, சரணுகதி படைந்து விட்டன.

தூரமில்லை

ஸ்பெய்ன் கடற்கரையோரங்களில் ஹிட்லர் கட்டிவரும் புதிய கோட்டைகளும், கடற்படை ஸ்தலங்களும, பிரிட்டனுக்கு அதிகத் தூரமில்லை. ஸ்பெய்னில் வட கடற்கரையோரங்களில் கட்டியிருக்கும் கோட்டைகள், பிரிட்டனுக்கு 300 மைல் தூரத்தில்தானிருக்கின்றன. டோவர் முனையிலிருந்து சமார் 700 மைல் தூரத்தில்தானிருக்கின்றன. 250 டன் நீர் மூழ்கிக் கப்பல்களே ஜெர்மன் ரகசியக் கோட்டைகளில் ஏராளமாக இருக்கின்றன இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் வேகத்தில் இதர தேசநீர் மூழ்கிக்கப்பல்களுக்கு இணைத்தவையல்ல ஜெர்மனியிலிருந்து சமார் 6000 மைல் தூரத்திலுள்ள மேலேகூறிய கோட்டைகளுக்கு 24 மணி நேரத்தில் வந்து சேர்ந்துவிடுமாம்! அதே வேகத்தில் அவை ஜெர்மனிக்குப் போய்ச் சேர்ந்து விடுமாம். 500 முதல் 712 நிறையுள்ள யு-போட் யுத்தக் கப்பல்களும ஜெர்மனியிடம் ஏராளமாக இருக்கின்றன. இந்தக் கப்பல்களும் வேகத்தில், இதர தேச யுத்தக் கப்பல்களுக்குச் சப்பட்டையல்ல. இதர தேச யு-போட்கள் உபயோகிக்கும் பெட்ரோல், எண்ணெய் முதலியவைகள், ஜெர்மன் யு-போட்களுக்கு 100க்கு 15 விதம் குறைவாகவே செலவாகின்றன. என்ருலும், ஜெர்மன் போட்களே அதிக வேகமாக ஓடக் கூடியவை. இந்த உண்மையைப் பிரிட்டனும், பிரான்சும் அறிந்தே இருக்கின்றன.

முஸோலினி உருட்டல்

ஹிட்லர் இவ்வளவு ஆர்ப்பாட்டஞ்செய்யும்போது, முஸோலினி சும்மா இருப்பாரா? அவரும்உருட்டிப் பார்க்கிருர்; இரு சர்வாதிகாரிகளும், வெறும் உருட்டல், மிரட்டலால காரியஞ்சாதித்துக்கொண்டு போகிருர்கள். பிரிட்டனையும்பிரான்சையும் ஜெக்கோ விஷயத்தில் சரணுகதிபடையச் செய்ய ஹிட்லர் பிரான்சில் தீவிரப்பிரசாரஞ்செய்தார். அந்தப் பிரசாரத்துக்காக மட்டும் அவர் சுமார் 20 கோடி பவுன் செலவு செய்தாராம். அபிசீனியாமீது படையெடுத்துச் சென்ற முஸோலினி, அக்காலத்தில் இதே பிரசாரத்துக்காக சுமார் 40 கோடி பவுன் செலவு செய்தாரெனத் தெரிகிறது. அவர் அவ்வளவு தூரம் பணத்தை வாரி இறைத்ததால்தான் அபிசீனியாவை அவர் ஜெயிக்க முடிந்தது. இன்றளவும் முஸோலினி பிரசாரத்தை நிறுத்தவில்லை. யுத்தத்துக்கான ஏற்பாடுகளேயுங் குறைத்துக்கொள்ளவில்லை இதாலியின் எல்லைப்புறத்தைப் பாதுகாப்பதற்கென ஒரு தனி ராணுவத்தை அமைத்திருக்கிருர். விமானப் படையிலும், கடற்படையிலும் பிரிட்டனுக்கு நிகராக விளங்க வேலை செய்து வருகிருர். மத்தியதரக் கடலில் பிரிட்டனை

பிரிட்டன் கழுத்துக்குக் கத்தி!

(முன் பக்கத் தொடர்ச்சி)

எதிர்த்து நிற்கக்கூடிய ஒரு பெரும் கடற்படையை உருவாக்கி வருகிருர் இத்துடன் விமானப்படையிலும் விசேஷ ஊக்கங்காட்டி வருகிருர். பிரிட்டன் கடற்படையை மத்தியதரக் கடலில் ஜெயிக்க முடியாது போனலும், மத்தியதரக் கடலின் கீழும், மேலும், அதாவது, ஆகாயத்திலும் பிரிட்டனைத் தோற்கடிக்க முடியுமென்று முஸோலினியும், அவர் வாயாகிய கயாடா முதலியோரும் ஜம்பம் பேசி வருகிருர்கள். பிரிட்டனையும், பிரான்சையும் தோற்கடிக்க வேண்டுமென்பதே ஹிட்லர், முஸோலினியின் ஒரே நோக்கம். ஜெக்கோவைச் சார்ந்த ஸுடேட்டன் பிரதேசங்களை ஜெக்கோ மரியாதையாக ஜெர்மனிக்குக் கொடுத்திருக்காவிட்டால், இதாலி கண்டிப்பாக ஜெர்மனியுடன் சேர்ந்து ஒரு பெரிய யுத்தத்தை ஆரம்பித்தே இருக்குமாம்! அப்படியானல், பிரிட்டன் பிரான்ஸ் பாடு என்னவாகியிருக்குமென முஸோலினி கூறுகிருர். ஜெர்மன் சார்பில் யுத்தம் ஆரம்பிக்கத் தயாராக அவர் இருந்திருரென்பது இதிலிருந்து தெளிவாகிறது



ஐரோப்பாவைக் குதிரை வைத்து, ஐரோப்பா மீது இன்று சவாரி செய்கிறார் ஹிட்லர். எனினும், அந்த ஹிட்லரை எதிர்க்க ஐரோப்பிய தேசங்களுக்கு ஆண்மை இல்லை.

டுனிஷ் கதி என்னமோ?

ஸுடேட்டன் பிரதேசத்தை ஜெர்மனிக்குக் கொடுக்க இதாலி ஆதரவாக இருந்தது. இப்பொழுது பிரான்சுக்குச் சொந்தமான டுனிஷ் பிரதேசத்தை அபகரிக்க இதாலி நினைக்கிறது. இது வட ஆப்ரிக்காவில் லிபியாவுக்கும், அல்ஜீரியாவுக்கும் இடையிலிருக்கிறது. டுனிஷ் இதாலி கைக்குப் போகுமேயானல் மத்தியதரக் கடலில் ஒரு பெரிய இதாலி கடற்படையை அமைக்க இதாலிக்கு ரொம்பச் சாதகமாக இருக்கும். ஆகவே, டுனிஷ்மீது இதாலி கண் வைத்திருக்கிறது அந்த டுனிஷைப் பறிக்க இதாலி ஜெர்மனியின் உதவியை நாடலாம், அப்படியானல், ஜெர்மனிக்கும் இதாலிக்கும் பயந்து பிரான்ஸ் விட்டுக்கொடுக்குமா? விட்டுக் கொடுக்காவிட்டால் ஒரு யுத்தம் ஏற்படுமென்றே தெரிகிறது.

அமெரிக்கா எச்சரிக்கை

இந்நேரத்தில் அமெரிக்கத் தலைவரான ரூஸ்வெல்ட் ஜெர்மனியையும் இதாலியையும் எச்சரித்திருக்கிருர் ஜனநாயகத்தைக் காப்பாற்றப்போவதாகக் கூறுகிருர். இந்த எச்சரிக்கையைக் கண்டு, பிரிட்டனும், பிரான்சும் ஆனந்தப் படலாம். ஆனல், ஜெர்மனியும், இதாலியும் பயந்துவிடாது ஹிட்லரும், முஸோலினியும் இப்பொழுதே அமெரிக்காவை எச்சரித்து உறும ஆரம்பித்திருக்கிருர்கள் சர்வாதிகார ஆட்சியாகிய பாஸிஸ்ட், நாஜியர் ஆட்சியை எவராலும் ஒழிக்க முடியாதென அவர்கள் மார்தட்டுகிருர்கள்.

ஆனல், அந்த சர்வாதிகார ஆட்சிக்கு சாவுகாலம் நெருங்கி விட்டதென்றே கூறலாம். 1939ம் வருடத்தில் சர்வாதிகார ஆட்சிக்குச் சாவுமணி அடித்தே தீருவார்கள் ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் குழப்பமே சர்வாதிகார ஆட்சியை ஒழிக்க முதல் ஏற்பாடாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

பரிசு அளிப்பதற்கு இது தகுதியான சமயம்

"ஜேசன்" லீவர் கெடியாரம்



15 ஜெம்புகள் அமைக்கப்பட்டது இந்த கை கெடியாரம் பார்வைக்கு மிகவும் அழகாயும், பல வருஷங்கள் உழைக்கக் கூடியதுமானது.

இது உங்கள் சிநேகிதர்களுக்கு பரிசு அளிப்பதற்கு தகுதியானது.

இந்த புது வருஷகாலத்திற்காக விலை மிகவும் சரசமாய் செய்திருக்கிறது.

3 வருஷம் உத்திரவாதம்.

பட்டை அளவு 8¾
குரோம் கேஸ் ரூ. 15
ரோல்டு கோல்டு ,, 25
9 காரட் கோல்டு ,, 55

ஜலால் அண்டு சன்ஸ்.,
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்.
46, ரட்டன் பஜார், சென்னை.
—: பிராஞ்சு :—
மவுண்ட்ரோட், சென்னை.
அபிட்ரோட் ஹைதராபாத், டெக்கான்

Y. Kuppuswamy Naidu,
OPTICIAN

120 & 121, Moor Market: Madras.
PLEASE PAY US A VISIT.

தாமதம் வேண்டாம்! உடனே எழுதுங்கள்!!

மாதந்தோறும், அவ்வப்போதும் வெளிவரும் லோகசக்தி பிரசுரங்களை தென்னாடு முழுவதும் விற்பனை செய்வதற்கு

ஏஜண்டுகள் தேவை

விவரங்களுக்கு:— லோகசக்தி ஆபீஸ், 21-A, சௌந்தரவம் ரோட், சென்னை.

உங்களுக்குத் தெரியுமா?

வயிற்றுக்குள் போன சரக்குகள்!

இங்கிலாந்தில் செஸ்ட்டர் என்னுமிடத்திலுள்ள ஒரு குடும்பத்தார் உபயோகித்துவரும் கரண்டி, முள் மோதிரம், வளையல்கள் முதலியவை திடீர் திடீரென மறைந்து வந்தன. அந்தச் சாமான்களைத் திருடிக்

கொண்டு போகிற திருடன் யாரென்பதைக் கண்டு பிடிக்க முடியவில்லை மனைவிக்கு அதிக மனக் கஷ்டம். புருஷன் அந்தத் திருட்டைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. ஒரு நாள் திடீரெனக் கணவனுக்குச் சகிக்க முடியாத வயிற்றுவலி ஏற்பட்டது. அவர் உயிருக்கு ஆபத்து வரும் போலிருந்தது. ஆகவே, அவரை உடனே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக் கொண்டுபோனார்கள். டாக்டர் உடனே ஆப்ரேஷன் செய்து பார்த்தார். அவர் வயிற்றிலுள்ள அபூர்வ சாமான்களைக் கண்டு திடுக்கிட்டுப் போனார். வயிற்று வலிக்காரர் வீட்டில் காணாமற்போன கரண்டி, முள், மோதிரம், இரும்பு வளையங்கள், சிறு ஆணித் துண்டுகள், ஸ்க்ரூ முதலியவைகளெல்லாம் அவர் வயிற்றினுள்ளிருந்தன மொத்தத்தில் சுமார் 500 சரக்குகளிருந்தனவாம்! படத்தில் காட்டியிருக்கும் சரக்குகளைப் பாருங்கள்!

கண்ணாடி வீடு!

சாதாரணமாக வீடுகள் செங்கல்லாலும், சுண்ணாம்பு, மண்முதலியவைகளால்கட்டப்படுகின்றன. தற்போது செமிண்டாலும் பெரிய வீடுகள்கட்டப்படுவது எல்லோருக்கும் தெரியும். எதிர் காலத்தில் அநேகமாகப் பெரிய வீடுகளையெல்லாம் கண்ணாடிகளாலும், மரத்தாலும், அல்லது, இரும்பாலுமே கட்டி முடிப்பார்கள். கண்ணாடிச் செங்கல்கள் ஏராளமாகச் செய்யும் முறையைக் கண்டுபிடித்திருக்கின்றனர். இந்தக் கண்ணாடிச் செங்கல்கள் கட்டியாக இல்லை; குழாயாகவே இருக்கின்றன என்றாலும்செங்



கல்லை விட அவை அதிக உறுதியாக இருக்கின்றன. இலகுவில் உடைவதில்லை. வெளியிலிருந்து வரும் சப்தம் வீட்டினுள் கேட்பதில்லை. வீட்டினுள் என்ன நடக்கிறதென்பதை வெளியிலிருந்து பார்க்க முடியாது. ஆனால், வீட்டினுள்ளிருந்து வெளியில் என்ன நடக்கிறதென்பதை நன்றாகப் பார்க்கலாம். வீடுகள் நல்ல வெளிச்சமாக இருக்கும். இவ்விதம் அபூர்வமாக வீடுகள் கட்டும் முறையைக் கண்டிபிடித்திருக்கிறார்கள். எதிர்கால அதிசயங்களில் கண்ணாடி வீடுகளும் ஒரு அதிசயமாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

திமிங்கில வாசல்

லெவிஸ் தீவுகளின் தலை நகரான பிரகார் என்னும் பட்டணத்துக்குப் போகவேண்டுமேயானால் படத்தில் காட்டிய திமிங்கில வாசலைக்



கடந்துதான் போகவேண்டும். நகரத்தின் கேட் முன்னிலையில் இந்த இரு எலும்புகளும் வளையாக நிறுத்தப்பட்டிருக்கின்றன. இந்த இரு எலும்புகளும் சுமார் 100 அடி நீளமுள்ள ஒரு பெரிய திமிங்கிலத்தின் வாயிலிருந்து எடுக்கப்பட்டவை. இன்றளவும் அந்த இரு எலும்புகளும் புதிதாகவே பளபளப்பாகயிருக்கின்றன.

உயிர் கொடுக்கும் ஆடை!

படத்தில் காட்டியிருக்கும் சிற ஆடை சில சமயங்களில் உயிரைப் பாதுகாக்கும். இது ஒருவகையான

ரப்பர் ஆடை. இந்த ஆடையைப் பெண்கள் அணிந்துகொண்டால் தைரியமாக தண்ணீரில் இறங்கலாம். தண்ணீரில் இறங்கியதும் அந்த ஆடை ஜலத்திலுள்ள காற்றை உட்கொண்டு பலூன் மாதிரி ஊதிவிடுகிறது. தண்ணீரில் மூழ்க முடியாது, தண்ணீரில் மிதந்துகொண்டே பல மணி நேரத்துக்கு இருக்கலாம். கப்பல் யாத்திரை போகும் ஐரோப்பியப் பெண்கள் பலர் இந்த ஆடையை அணிந்து கொள்ளுகிறார்கள். திடீரென ஆபத்து நேர்ந்தால் அவர்கள் உயிருக்குப் பயமில்லை. சமுத்திரத்தில் விழுந்தாலும் இந்த ஆடை உயிரைப் பாதுகாக்கும்.

மேக வியாதி

என்னும் விஷப்பாம்பைக் கொன்று தேகாரோக்கியத்தைப் பெற்று இன்பமான இல்லற வாழ்க்கையையனுபவிக்க

பங்காமிருதவடி

என்னும் மருந்து தகுந்த உபாயம்
20 மாத்திரையடங்கிய டப்பி ரூ.1-12
40 ,, ,, ரூ.3-0

மதன மஞ்சரி பார்மஸி,
1-94 சைனாபஜார் ரோட் மதராஸ்.
ஏஜண்டு: - ஐவேரியன் ஸ்டோர்ஸ்,
513 குலியா தெரு, பினாங்கு.

மணத்திலும் குணத்திலும் சிறந்தது

நீபா

(வேப்பம், நீம், மார்கோஸா)

சோப்

GANGA WORKS, ADYAR, MADRAS

1-64, தங்கசாலை தெரு, பி. டி. மதராஸ்   (ஏஜண்டுகள் தேவை)

எமது மகத்தான 7-வது வாரம்

அநேகர் இடமின்றி திரும்புவதை அறிந்தும், நீங்கள் என் இடத்திற்கு மூத்தக்கூடாது.

சென்னை ராயல் தியேட்டரில்

மதுரை தேவி பால விநோத சங்கீத சபையாரால்

ஸ்ரீ. கிருஷ்ணலீலா -

என்னும் நாடகத்தை ருக்மணி கல்யாணம் வரையில் நடத்துவார்கள்.

13-1-39 வெள்ளிக்கிழமை முதல் பிரதிதினமும்

செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30 க்கும்,
மற்ற நாட்களில் மாலை 5-30 க்கும்

இத்துடன் மயில் டான்ஸ் சேர்க்கப்பட்டிருக்கிறது.

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் புரொப்ரைட்டர்.

ஜப்பான் தலைநகரான டோக்கியோவிலுள்ள விமானப் போக்குவரத்துக் கம்பெனியார், மஞ்சுகோவில் விளையும் சோயாபீன்ஸ் கொடுத்து, ஜெர்மனியிலிருந்து ஒரு பெரிய விமானத்தை வாங்கியிருக்கிறார்கள்.

* * *

ஜெக்கோவில், "பிலியர்டு" என்னும் பந்தய ஆட்டத்தில் பேர்பெற்ற ஒருவருக்கு இடது கையில் 3 விரல்கள் கிடையாது என்றாலும், "பிலியர்டு" விளையாட்டில் அவரைத் தோற்கடித்தவர்கள் இதுவரையில் எவருமில்லை.

* * *

லிங்கோன் என்னும் இடத்தில் இறந்த பறவைகள், பூச்சிகள் முதலியவைகளை விற்கும் வர்த்தகர் கடையில், ஒருநாள் இறந்த புறா ஒன்று துடி துடித்துக்கொண்டிருந்தது. சொந்தக்காரர் அதைக் கண்டு பயந்து போனார். அந்தப் பறவையின் அருகில் நெருங்கிக் கவனித்தார். சிலருடைய உதவியைக்கொண்டு, அந்தப் புறாவை எடுத்தார். புறாவினுள் சோதித்துப் பார்த்தபோது, அங்கு ஒரு எலி, குட்டி போட்டிருக்கக் கண்டார். எலியின் மாய சக்தியால் புறா அசைந்தது! அதைக் கண்டு செத்த புறாவுக்கு உயிர் வந்து விட்டதாக எண்ணி சொந்தக்காரர் திடுக்கிட்டுப் போனார்!

* * *

இதாலியில், ஆர்னோ நதிக்கரையில் சிலர் மீன் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஒருவர் வலையை இழுத்தபோது அது இழுக்கக் கஷ்டமாக இருந்தது. பெரிய மீன் அகப்பட்டிருக்கக் கூடுமென நினைத்து அவர் வலையை வெகு ஜாக்கிரதையாகக் கரையில் இழுத்துக் கொண்டுவந்து பார்த்தார். வலையில் ஒரு பெரிய சிலை அகப்பட்டிருந்தது. மீனைக் காணவில்லை!

* * *

ஜப்பானில் ரேடியோ கேட்பதற்கு மாதமொன்றுக்கு 1 ஷிலிங் கொடுக்க வேண்டும். ரேடியோ நிர்வாகம் சர்க்கார் கையிலேயே இருக்கிறது ஆகவே, ரேடியோ மூலம் ஜப்பான் சர்க்காருக்கு வருடமொன்றுக்கு சுமார் 200000 பவுன் வருமானம் கிடைக்கிறது.

* * *

இங்கிலாந்தில் லிவர்பூல் என்னுமிடத்தில் பூனைகளுக்குத் திடீரென இன்புளுவன்ஷா ஜுரம் கண்டது. ஒரு மாதத்தில் பல ஆயிரக்கணக்கான பூனைகள் மாண்டன. ஒரு தெருவில் ஒரு பூனைக்கு ஜுரங் கண்டால் போதும்; சில தினங்களில் அந்த வீதியிலுள்ள பூனைகளெல்லாம் ஜுரம் கண்டு இறப்பது நிச்சயம். பூனைகளுக்கும் இன்புளுவன்ஷா ஜுரத்துக்கும் பொருத்தமே இல்லையாம்!

* * *

டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளிலுள்ள சுதேசிகளில் ஆடவர் வேலை செய்யவே கூடாது பெண்கள்தான் சகல வேலைகளும் செய்யவேண்டும் ஆடவனை வேலைசெய்யக் கண்டால் பெண்கள் எல்லோரும் கூடி ஆடவனுக்கு அபராதம் போடுவது வழக்கம்.

* * *

வல்லூறு பறவைகளைப் பிடித்துக் கொன்று, அவற்றை எண்ணெயில் வறுத்தும், குரங்குத் தலைகளைக் கறி செய்தும், இன்னம் சில பறவைகளைக் கறி செய்தும் டோக்கியோ தெருக்களில் விற்பனை செய்து வருகிறார்கள். அந்தக் கறியைச் சாப்பிட்டால் பல நோய்கள் குணமாகி விடுமென்ற நம்பிக்கை பல ஜப்பானியருக்கு இருந்துவருகிறது.

* * *

மெக்ஸிகோ வளைகுடாக் கடலின் கீழுள்ள சுமார் 6000 ஏக்கர் நிலத்தை ஒரு எண்ணைக் கம்பெனியார் 81200 பவுனுக்கு வாங்கியிருக்கிறார்கள். இந்த நிலத்தை விற்றவர்கள் டெக்ஸாஸ் சர்க்கார். அதை வாங்கியவர் ஒரு எண்ணெய்க் கம்பெனியார். மெக்ஸிகோ கடலின் கீழ் பல எண்ணெய்க் கிணறுகளிருப்பதாக அக்கம்பெனியார் கூறுகிறார்கள்.

* * *

ஒரு போர்ச்சுகல் பெண்மணி சுமார் 80 வருடங்களுக்கு முன் ஒரு கிராமத்தில் சென்று குடியேறினாள். அவள் இறந்து சில வருடங்களாகின்றன ஆனால், அந்தக் கிராமவாசிகள் அந்தப் பெண்மணியை மறக்க முடியாது. ஏனெனில், அந்தக் கிராமம் முழுவதிலுமே, அந்தப் பெண்ணின் மக்களும், பேரப்பிள்ளைகளும் கொள்ளுப் பேரப்பிள்ளைகளுமே இருக்கிறார்கள். அங்கியர் யாருமே கிடையாது. தற்போது அந்தக் கிராமத்தில் அவளுடைய 14 மக்களும், மக்களின் பேரன்மார் 52 பேர்களும், 108 கொள்ளுப் பேரன்களுமிருக்கிறார்கள். அந்தக் கிராமவாசிகளுக்குள் சண்டை சச்சரவு வந்ததே இல்லை காரணம் எல்லோரும் ஒரே உறவினர்களாயிருப்பதினால் தான்!

* * *

இங்கிலாந்தில் ந்யூசவுத் வேல்ஸ் பிரதேசத்திலுள்ள ஸ்கோன் என்னும் ஊரில் ஒரு பெரிய மரத்தின் அடி மரம் இன்னமும் இருக்கிறது. அந்த மரத்தை வெட்ட எவரும் துணிந்ததில்லை. ஒரு தாவர ஆராய்ச்சிக்காரர் அந்த அடிமரத்தைப் பரிசோதித்துப் பார்த்தார். அந்த மரம் சுமார் 20 கோடி வருடங்களுக்கு முன்னிருந்த மரங்களின் இனத்தைச் சார்ந்ததென்றும், அந்த இனத்தைச் சார்ந்த மரங்கள் சுமார் 200, 300 அடி உயரத்தில் வளரக் கூடுமென்றும் கூறினர். தற்போது பட்டுப்போயிருக்கும் மரங்கூட பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னடியே இருந்திருக்க வேண்டுமென்றும், அந்த மரம் சுமார் 120 அடி உயரத்தில் வளர்ந்திருக்கலாமென்றும் தெரிவித்தார்.

* * *

லண்டனில் ஒரு ஆச்சரியமான ஆப்ரேஷன் நடந்தது. ஒருவர் தொண்டை நோயால் அதிகம் கஷ்டப்பட்டார். டாக்டர் அவர் தொண்டையில் ஆப்ரேஷன் செய்து, ஆப்ரேஷன் செய்த இடத்தில் இன்னொருவருடைய கழுத்திலிருந்து கொஞ்சம் தசையை அறுத்து ஒட்டவைத்தார். தொண்டை நோய்க்காரர் குணமடைந்தார். ஆனால், சிறிது காலத்தில் அவரால் ஆகாரம் உட்கொள்ள முடியாது போயிற்று. அதற்குக் காரணமென்னவென்று டாக்டர்கள் பரிசோதித்துப் பார்த்ததில் அவர் தொண்டையில் ரோமம் அதிகமாக வளர்ந்து, ஆகாரம் விழுங்க முடியாமல் தடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். வேறொருவர் கழுத்திலிருந்து அறுத்தெடுத்த தசையிலிருந்தே ரோமம் வளர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

கர்ப்ப சஞ்சீவி எண்ணை

ஸ்திரீகளுக்கு மாதாந்தரத்தில் வரும் பொறுக்க முடியாத வயிற்று வலியை அந்த க்ஷணமே நிறுத்தும். சூதக சுரம், சூதக சூலை, சூதக ஜுரம், சூதக வாய்வு, சூதக கட்டு, சூதகச் சிக்கல், சூதகத் திராவி, சூதகக் கட்டினால் உண்டாகும் தலைவலி, உடம்பு வலி, கைகால் பொருத்துகள், உளைவு, மேலெல்லாம் குத்து, குடைச்சல், உடம்பு ஸ்தூலித்துப் போதல், வயிறு பெருத்தல், காந்தல் எழுந்திருக்க முடியாமை, திகைப்பு, மூச்சு, மயக்கம், பசியின்மை, சாப்பாட்டில் வெறுப்பு, ஒரு செம்பு ஜலம்கூட தூக்க முடியாத பலஹீனம், சூதக ஜன்னி முதலிய வியாதிகளை யெல்லாம் நீர்த்து கர்ப்பப்பை சுத்திகரிப்பட்டு, கர்ப்ப உற்பத்தியை உண்டுபண்ணும். கர்ப்பம் தரிக்க 6'வித மலடு தீரும். கர்ப்பம் தரிக்கவிடாது பண்ணும் கிருமிகளை கட்டுடன் வெளியில் அகற்றிவிடும். திடகாத்திரமும் பூரண ஆயுளுமுள்ள குழந்தை தரிக்கும்.

நபருக்கு 3 புட்டி வேண்டும். இந்த பேப்பரைக் குறித்து எழுதவும்.

1 புட்டி ரூ. 2. 3 புட்டி 5-ரூ. செலவு வேறு.

குணம் இல்லாவிடில் ரூ. 5. வாபஸ்

R. M. K. சிவசுப்ரமண்யம்

சித்த வைத்தியசாலை பழனி. S. I.

பிராஞ்சு:—16, திருவல்லிகேணி ஹைரோடு, சென்னை.

கஷ்டமே! நீ சுகமாய் போய்வா!
அசக்தியே! உனக்கும் வந்தனம்!
நீயும் போகலாம்.

எங்களது உலகப் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகித்து வந்தால் தேகபலத்தையும், ஊக்கத்தையும், உற்சாகத்தையுமடைந்து வஜ்ர சரீரமாகும்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0

இனும்! போஜன விதிகள் இனும்!!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம், 26 பிராட்வே, மதருஸ்.

ஏஜண்டு:—
T. N. சொக்கலிங்கம் பிள்ளை
17, வடக்குச்சித்திரை வீதி, மதுரை.

ஜண்டு
கேசரி ஜீவன்

தாதுவிருத்தியைக்
கொடுக்கும்
சிரேஷ்டமான டானிக்

ஜாண்டு, அலோபதிக் ஆயுர்வேதிக்
மருந்துகள்
கீழ்க்கண்ட எமது தமிழ் நாடு
சப் ஏஜண்டுகளுடமிருந்து
கிடைக்கும்.

தமிழ் நாட்டில் சப் ஏஜண்டுகள்

மதுரை:—டி என். சி. நாகலிங்கம் பிள்ளை, வடசித்திரை தெரு.
திருச்சி:—எஸ். வைத்யா அண்டு கம்பெனி, விநாயகர் மெடிகல்ஹால்
புதுக்கோட்டை:—அண்ணு கெமிஸ்ட்ஸ்.
காரைக்குடி:—கனேசர் மெடிகல்ஹால்.
கும்பகோணம்:—டாக்டர் எஸ். கோவிந்தசாமி நாயுடு.
தஞ்சாவூர்:—பி. வி. முத்துகிருஷ்ண ராஜா.
கடலூர்:—ஸ்ரீராம பார்மஸி, புதுப்பாளையம்.

or. From Madras Presidency Agents
Damoder & Co, 78, China Bazaar Road, Madras.

ஜெர்மன் ரிப்பீடிங் அலாரம் பிஸ்டல்



இது நூதன முறையில், உயர்தர எஃகுத் தகட்டினுல் தயாரித்தது. உள்ளே பலத்த ஸ்பிரிங், ஆக்ஷனுடன் அமைக்கப்பட்டது. ஏககாலத்தில் எட்டு அல்லது பத்து வெடிகள் உடனுக்கு உடனே, கனத்த சப்தத்துடனும், நெருப்புடனும், புகையுடனும் கிளம்பி, எதிரிகளை பிரமிக்கச் செய்யும். இது உண்மையில், ஒரு பெரிய கைத் துப்பாக்கிக்கு ஒப்பானது.

50 கேப்புகளுடன் கூடிய பிஸ்டல் விலை ரு. 3-0-0
தபாற் செலவு பிரத்தியேகம். தனியே கேப்புகள் 50-க்கு ரு. 1.

எமது விலாசம்: பக்தா அண்டு கம்பெனி,
1-24, ஆயலூர் முத்தையா முதலி தெரு, சென்னை.



பி. நடேச முதலியார்.

ஸ்தாபிதம். 1914 டெலிபோன் நெம்பர் 1224
புராதன இரும்புபெட்டி தொழிற்சாலை உற்பத்தியாளரும், கடிகாரம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் சொந்தக்காரருமான

உயர்தர இரும்பு பெட்டிகள், பீரோக்கள், அரிசி அரவைகள், மாவு மில்கள், சீயக்காய் மில்கள், இதற்கு வேண்டிய தனிசாமான்கள் இதர மிஷினெரி சாமான்களும் தயாரித்து சப்ளை செய்வர்.

59. பிராட்வே மதராஸ்.

ஷாக்புருப் லிவர் கைக்கடிகாரம்



எந்தவித தொழிலாளரும் இதை உபயோகப் படுத்தலாம். மிகவும் உறுதியான மிஷின். ஏதோ கை தவறுதலாக கீழே விழுந்தபோதிலும் கடிகாரத்திற்கு ஒருவிதமான அபாயமும் ஏற்படாது. மிகவும் குறைந்த விலை இரண்டு வருஷ உத்திரவாதத்துடன் லிவர் ரவுண்டு கிளாஸ் ரவுண்டு கேஸ் கடிகாரத்தின் விலை ரூ. 3-15-0 ரவுண்டு கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 4-12-0 சதுர கிளாஸ் சதுர சைஸ் கடிகாரம் விலை ரூ. 7-8-0



ஹெட் ஆபீஸ்:—
ஷடார் வாச் கம்பெனி, மூர்மார்க்கட் சென்னை.
கவர்ன்மெண்ட் அண்டு ரயில்வே சப்ளையர்ஸ்,

சுதந்திர வீரன் சுபாஷ் சந்திர போஸ்
ஜீவிய சரித்திரம்

இந்திய நாட்டின் இளஞ் சிங்கம் சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரம். சுபாஷ் போஸின் வீர வாழ்க்கையையும், தியாக புத்தியையும், சீரிய குணத்தையும் இந் நூலில் விரிவாகக் காணலாம். ஒவ்வொரு தமிழனும் இதை வாசித்துப் பயன் பெறுவார்களாக.

புத்தகம் 1 க்கு விலை அணு 4.

5 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் புத்தகம் அனுப்பப்படும்.

மலாய் நாட்டிலுள்ளவர்களும், மற்ற அந்நிய நாட்டிலுள்ளவர்களும் 0—8—6 ஸ்டாம்பு அனுப்பிவைத்தால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர், "தமிழ்மணி"

Rg. No. 3379

ரிஜே விஜிடபிள் டானிக் ஸிரப்

சிறந்த ரத்த புஷ்டியை உண்டாக்கும்
டாக்டர்கள் இதை பெருமையாய் புகழ்ந்து அனேகருக்கு சிபார்சு செய்கிருர்கள். சாம்பில் வேண்டுவோர் 0—2—0 ஸ்டாம்பு அனுப்பினுல் உடனே அனுப்பப்படும்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும். ஏஜண்டுகள் தேவை.
சி. எப். அண்டு சன்ஸ், 503 தங்கசாலைத் தெரு சென்னை.

சினிமா நடிகர்களின் (போட்டோ படங்கள்)

சினிமா தனிபடங்கள் டஜன் 1-க்கு ரூ 1.
தேசியத் தலைவர் படங்கள் டஜன் 1-க்கு ரூ 1.
படுக்கை அறையின் லீலா விநோதப் படங்கள் டஜன் 1-க்கு ரூ 1 0-0
24 படங்கள் ரூ 1-12 0
வி. பி. யில் அனுப்ப முடியாது. முன் பணம் அனுப் வேண்டும்.

எம். ஜி. ராஜன் அண்டு கம்பெனி, P B 231 G P O. MADRAS (T)

24 மணி நேரத்தில் வெள்ளையும் எரிச்சலும் நின்றுவிடும். வேடியாரம் வைத்துப் பரிக்ஷிக்கவும் குணமில்லாவிடில் ரூபாய் வாபீஸ்

ஆச்சரியமான ஒளஷதம்

ஸ்ரீ. சத்திய நாராயண மாத்திரை

இம்மகா மகத்துவம் பொருந்திய மாத்திரையை, காலை மாலை சாப்பிட்டால் வெள்ளை என்னும் கொடிய ரோகம் அடியோடு ஒழிந்து விடும், சில மருந்துகள் அப்பொழுது மாத்திரம் வியாதியை கண்டித்து பிறகு வந்துவிடும் அதலுல் தளர்ந்த வயதில் பலவிதமான மேக வியாதிகள் உற்பத்தியாகி கஷ்டப்பட்டிருக்கிருர்கள் என்று யாவருக்கும் தெரிந்த விஷயம், இம்மருந்தை சாப்பிட்டால் ஆயுள்பரியந்தம் அந்த வியாதி தலை காட்டாது, நல்ல காலம் உள்ளவர்கள் இதை உடனே வாங்கி பரிக்ஷிப்பார்கள். அனேக படாடோப ஒளஷதங்களை சாப்பிட்டு ஏமாந்தவர்களுக்கு சந்தேகமாகத்தான் இருக்கும். வியாதி உள்ளவர்கள் எந்த மருந்தும் சாப்பிடாமல் இதை உடனே வாங்கி சாப்பிட்டு உங்கள் கவலையை ஒழியுங்கள் பொய்யல்ல உண்மை ஆண் பெண் இருவரும் சாப்பிடலாம்.

10-நாள் சாப்பிடக்கூடிய மாதிரி புட்டி விலை ரூ. 1-4-0 20-நாள் சாப்பிடக்கூடிய பெரிய புட்டி விலை. ரூ. 2-0-0
பினங்கு, சிங்கப்பூர் வெளியூர் வாசிகள் முன் பணம் அனுப்பவும்.

எமது விலாசம்:— **A. S.** வைத்தியசாலை, 8-வது பிட்டு, வேப்பேரி போஸ்டு மதராஸ்.

இந்தியா
தனிப்பிரதி
விலை அரையணா
இலங்கை
இந்தியாவுக்கு
வருட சந்தா
3—8—0
இலங்கையில்
தனிப்பிரதி சதம் 6
ஒரு மாதத்திற்குக்
குறைந்த சந்தா
கிடையாது

தமிழ் மணி

பர்மா, மலாய்
தனிப்பிரதி 0-1
வருட சந்தா
ரூ. 4—0—0
ஒரு வருஷத்திற்கு குறைந்த சந்தாவுக்குப் பத்திரிகை அனுப்பப்பட மாட்டாது.

மை வேண்டும் அடிமை வேண்டும் எவனுமில்லை, ஜாதியில்
இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே,
என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?—பாரதி

தயாராகிவிட்டது! * * தயாராகிவிட்டது!!

சொக்கநாதன்

: அல்லது :

ரங்கன் திருவிளையாடல்

என்னும் நாவல்
வெளிவந்து விட்டது

காதல், சோகம், ஹாஸ்யம்,
திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த
முதல்தரமான துப்பறியும் கதை.

உடனே ஆர்டர் கொடுங்கள் விலை 12 அணா.

முன் பணமாக அனுப்பவும். -::- வி. பி. யில் அனுப்பிவைக்கப்படமாட்டாது.

இந்தியாவிற்கு தபால் செலவு உள்பட ரூ. 1-0-0

பர்மா, மலாய் முதலிய அந்நிய நாடுகளுக்கு தபால் செலவு உள்பட ரூ 1-2-0

மானேஜர்:-
"தமிழ் மணி" ஜி. டி. மதராஸ்

Edited, Printed and Published by P. ALBIN at the "TAMIL MANI" Press, 21, Sembudoss St., G. T. Madras.